
# சோதிடமலர்

## SOTHIDA MALAR





உள்ளே......


புதிய ஜனதிபதியின்............
சைவ விரதங்களும் விழாக்களும்
அதிஷ்ட எண்ஞானம்
ஜாதகத்தில் சனி
ஆய்வுமன்றம்.


விபவ ஹூ தை மீ (14-1-89 — 11-2-89) ரூபா: 4-00

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 11 * இதழ் 10

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

*

விபவ ௵ தை ௴
( 14 - 1 - 89 )

ஸாவித்ரியாய ஸவித்ராய வரஹாய
வரேண்யாய வரேண்யவசிதாய ஸுரே
[ஸ்வராய|
நதிப்ரியாய தமோராஜஸ்ஹ்ருதா ப்ரியாய
தாமிஸ்ர சிவேதஹனாய நமச்சிவாய||

* * *

காசியினிருளை நீக்குங் கதிரொளியாகி யெங்கும்
பூசனை யுலகோர் போற்றுப் புசிப்பொடு சுகத்தை
[நல்கும்
வாசியேழுடைய தேர்மேன் மகாகிரி வலமாய்வந்த
தேசிகா வெனைரச்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

* * *

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே நாமவென்றி ரண் டெழுத்தினால்

* * *

சமுத்திர தீர்த்தமே மேகமாகி, மேகம், மழையாகி, மழைநதியாகி நதிதன் நிலைக்கு வந்த பின் சமுத்திரமாகவே மாறி அடங்கிப்போவது போல பரமாத்மா ஸ்வரூபத்தில் தோன்றிய ஜீவாத்மாக்கள் அதிலேயே ஐக்கியமாகி சாந்த மடைகின்றன.

வாயினால் நாமஜெபம், மனத்தால் தியானம், உடலால் பரோபகாரம், செல்வத்தால் தானம் ஆகிய நான்கினாலும் ஜபம், தியானம், பரோப காரம், தானம் என்னும் இப்புண்ணியச் செயல் களையும் செய்து பகவானின் கடாட்சத்தைப் பெற முயலவேண்டும்.

## இம்மாத விசேடங்கள்

### பொங்கல் திருநாள்

உத்தராயண புண்ணிய காலமான தை மாதம் முதலாம் திகதி சூரியன் மகரராசியில் பிரவேசிப்பதால் மகரசங்கிராந்தி என அழைக் கப்படும். இத்தினம் சூரியபகவானைப் பொங்க லிட்டு வழிபடுவதற்குரிய புண்ணியகாலமாகும். இந்துக்களாகிய நாம் ஆண்டுதோறும் கொண் டாடப்படும் விசேடங்களுள் இத்திருநாள் இயற் கையை வழிபடும் சிறப்புடைத்தாகவுமிலங்குகி றது எனலாம். அக்னி, சூரியன், சந்திரன் ஆகி யன இயற்கையேயுருவான கண்கண்ட தெய்வங் களாகும். சந்திரனை பூரணை காலங்களிலும் அக் கினியை வீடுகளிலும், ஆலயங்களிலும் ஹோமாதி கர்மங்களிலும் வழிபடுகிறோம். சூரியதேவனை வழிபடும்போது இங்கு குறிப்பிடப்படும் பொங் கல் திருநாளில் வீட்டு முற்றத்தில் சாணமிட்டு மெழுகிக் கோலமிட்டு அலங்கரித்து அடுப்பு வைத்து பானை முதலிய பாத்திரங்களில் பச்சரி சிப் பொங்கல் பொங்கி விநாயகர், சூரியபகவான் மகாவிஷ்ணு ஆகிய மூன்று தெய்வங்களுக்குப் படைத்து விசேடமாக சூரியதேவனைச் செந்தாம ரைப்பூ, செவ்வரத்தம்பூ ஆகிய மலர்களால் சூரி யனின் பன்னிருதிருநாமங்களையும் சொல்லி அர்ச் சித்து தீபாராதனை செய்து அவனின் அருட்பிர சாதம் பெற்று இனிய பொங்கலை சுற்றத்தவரு டன் இனிதே அருந்தி மகிழ்வடைவதே சூரிய வழிபாடாகும்.

### பூசநன்னாள்

சூரியபகவான் மகரராசியை அடையும் தை மாசத்தில் சந்திரன் கடகராசியில் (பூசநக்ஷத்தி ரத்தில்) சேரும்போது தைப்பூசமென்னும் புண் ணியதினம் கூடுகிறது. இதையொட்டியே தைப்

(5-ம் பக்கம் பார்க்க)

# விபவ வருஷ தை மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 42கலை 22விகலை)

| தேதி | | நாக்ஷத்ர நேர பகல் 12-00 | சூரியன் ☉ | சந்திரன் ☽ | செவ்வாய் ♂ | புதன் ☿ | குரு ♃ | சுக்கிரன் ♀ | சனி ♄ | ராகு ☊ | யுரேனஸ் ♅ | நெப்டி ♆ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜன | தை | ம நி செ | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க |
| 14 | 1 | 19 34 49 | 9 0 6 | 11 22 30 | 0 3 21 | 9 17 48 | 1 2 27 | 8 10 21 | 8 13 24 | 10 13 23 | 8 8 49 | 8 16 42 |
| 15 | 2 | 19 38 45 | 1 7 | 0 6 31 | 3 54 | 18 5 | 2 26 | 11 36 | 13 31 | 13 20 | 8 52 | 16 45 |
| 16 | 3 | 19 42 42 | 2 8 | 0 20 23 | 4 27 | 18 11 | 2 25 | 12 51 | 13 38 | 13 17 | 8 56 | 16 47 |
| 17 | 4 | 19 46 38 | 3 9 | 1 4 3 | 5 0 | 18 6 | 2 24 | 14 7 | 13 45 | 13 14 | 8 59 | 16 49 |
| 18 | 5 | 19 50 35 | 4 10 | 1 17 33 | 5 33 | 17 50 | 2 24 | 15 22 | 13 52 | 13 10 | 9 2 | 16 51 |
| 19 | 6 | 19 54 31 | 5 11 | 2 0 50 | 6 6 | 17 22 | 2 23 | 16 37 | 13 59 | 13 7 | 9 6 | 16 53 |
| 20 | 7 | 19 58 28 | 6 12 | 2 0 56 | 6 40 | 16 42 | 2 23 | 17 52 | 14 5 | 13 4 | 9 9 | 16 55 |
| 21 | 8 | 20 2 24 | 7 13 | 2 46 47 | 7 13 | 15 52 | 2 23 | 19 7 | 14 12 | 13 1 | 9 12 | 16 58 |
| 22 | 9 | 20 6 21 | 8 14 | 3 9 25 | 7 47 | 14 53 | 2 23 | 20 22 | 14 19 | 12 59 | 9 16 | 17 0 |
| 23 | 10 | 20 10 18 | 9 15 | 3 21 49 | 8 20 | 13 46 | 2 24 | 21 37 | 14 25 | 12 58 | 9 19 | 17 2 |
| 24 | 11 | 20 14 14 | 10 16 | 4 4 0 | 8 54 | 12 34 | 2 25 | 22 52 | 14 32 | 12 57 | 9 22 | 17 4 |
| 25 | 12 | 20 18 18 | 11 17 | 4 16 2 | 9 28 | 11 18 | 2 25 | 24 7 | 14 39 | 12 54 | 9 25 | 17 6 |
| 26 | 13 | 20 22 7 | 12 18 | 4 27 55 | 10 2 | 10 2 | 2 26 | 25 23 | 14 45 | 12 50 | 9 29 | 17 8 |
| 27 | 14 | 20 26 4 | 13 19 | 5 9 43 | 10 36 | 8 47 | 2 28 | 26 38 | 14 52 | 12 46 | 9 32 | 17 10 |
| 28 | 15 | 20 30 0 | 14 20 | 5 21 32 | 11 10 | 7 35 | 2 29 | 27 53 | 14 58 | 12 42 | 9 35 | 17 12 |
| 29 | 16 | 20 33 57 | 15 21 | 6 3 24 | 11 44 | 6 28 | 2 31 | 8 29 8 | 15 5 | 12 38 | 9 38 | 17 15 |
| 30 | 17 | 20 37 53 | 16 22 | 6 15 23 | 12 19 | 5 28 | 2 33 | 9 0 23 | 15 11 | 12 34 | 9 41 | 17 17 |
| 31 | 18 | 20 41 50 | 9 17 23 | 6 27 41 | 0 12 53 | 9 4 36 | 1 2 35 | 9 1 38 | 8 15 18 | 10 12 30 | 8 9 44 | 8 17 19 |
| பெப்ருவரி 1989 1 | 19 | 20 45 47 | 9 18 24 | 7 10 16 | 0 13 28 | 9 3 51 | 1 2 37 | 9 2 53 | 8 15 24 | 10 12 27 | 8 9 47 | 8 17 21 |
| 2 | 20 | 20 49 53 | 19 25 | 7 23 13 | 14 2 | 3 15 | 2 40 | 4 8 | 15 30 | 12 24 | 9 50 | 17 23 |
| 3 | 21 | 20 53 40 | 20 26 | 8 6 35 | 14 37 | 2 48 | 2 42 | 5 24 | 15 37 | 12 21 | 9 53 | 17 25 |
| 4 | 22 | 20 57 36 | 21 27 | 8 20 23 | 15 12 | 2 30 | 2 45 | 6 39 | 15 43 | 12 18 | 9 56 | 17 27 |
| 5 | 23 | 21 1 33 | 22 27 | 9 4 35 | 15 47 | 2 19 | 2 48 | 7 54 | 15 49 | 12 15 | 9 59 | 17 29 |
| 6 | 24 | 21 5 29 | 23 28 | 9 19 7 | 16 21 | 2 17 | 2 51 | 9 9 | 15 55 | 12 12 | 10 2 | 17 31 |
| 7 | 25 | 21 9 26 | 24 29 | 10 3 54 | 16 56 | 2 21 | 2 55 | 10 24 | 16 1 | 12 8 | 10 5 | 17 32 |
| 8 | 26 | 21 13 22 | 25 30 | 10 18 47 | 17 32 | 2 33 | 2 59 | 11 39 | 16 7 | 12 4 | 10 8 | 17 34 |
| 9 | 27 | 21 17 19 | 26 31 | 11 3 39 | 18 7 | 2 51 | 3 2 | 12 54 | 16 13 | 12 1 | 10 10 | 17 36 |
| 10 | 28 | 21 21 16 | 27 31 | 11 18 22 | 18 42 | 3 15 | 3 6 | 14 9 | 16 19 | 11 58 | 10 13 | 17 38 |
| 11 | 29 | 21 25 12 | 9 28 32 | 0 2 52 | 0 19 17 | 9 3 45 | 1 3 11 | 9 15 24 | 8 16 25 | 10 11 55 | 8 10 16 | 8 17 40 |

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விளையாட்டுப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது;

## (தை மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 34 நிமிஷம்)

| வாரம் | 6...34 7...34 | 7...34 8...34 | 8...34 9...34 | 9...34 10...34 | 10...34 11...34 | 11...34 12...34 | 12...34 1...34 | 1...34 2...34 | 2...34 3...34 | 3...34 4...34 | 4...34 5...34 | 5...34 6...34 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;

# நாள் சுபமா?

தை 1 சனி (14-1-89) ஸப்தமி காலை 8-26வரை, ரேவதி - மரணம் மாலை 6-18 வரை, தைப்பொங்கல், கரிநாள், சுபதினமன்று.
ராகு 9-34—11-01

தை 2 ஞாயி (15-1-89) அஷ்டமி காலை 6-36வரை. நவமி பி.இ. 2-02 வரை, அசுவினி மாலை 5–15 வரை, மரணம், மாட்டுப்பொங்கல், அசுபதினம்,
ராகு 5-04- 6-31

தை 3 திங் (16-1-89) தசமி பி.இ. 3-46 வரை. பரணி - சித்தம் மாலை 4-29 வரை, கார்த்திகை விரதம், கரிநாள், சுபதினமன்று.
ராகு 8-04 – 9-31

தை 4 செவ் (17-1-89) ஏகாதசி பி.இ. 2-25வரை, கார்த்திகை மாலை 4-01 வரை, சித்தாமிர்தம், ஸர்வஏகாதசிவிரதம், சுபகருமங்களை விலக்குக.
ராகு 3-35—5-02

தை 5 புத (18-1-89) துவாதசி பி.இ. 2-14வரை, ரோகிணி பகல் 3-52 வரை, சித்தம், சுபகருமங்களுக்கு உகந்ததினம். ராகு 12-35—1-02

தை 6 வியா (19-1-89) திரயோதசி, பி.இ. 2-03 வரை, மிருகசீரிடம் மாலை 4-08 வரை, மரணம், பிரதோஷவிரதம். அசுபதினம்.
ராகு 2-05—3-32

தை 7 வெ (20-1-89) சதுர்த்தசி பி.இ. 2-19வரை திருவாதிரை மாலை 4-48 வரை. சித்தம், சுபதினமன்று. ராகு 11-05—12-32

தை 8 சனி (21-1-89) பூரணை பி.இ. 3-04 வரை, புனர்பூசம் மாலை 5-54 வரை, சித்தம், பூரணை விரதம். நற்கருமங்களுக்கு உகந்ததினம்.
ராகு 9-35—11-02

தை 9 ஞா (22-1-89) பிரதமை பி.இ. 4-19வரை, பூசம் மாலை 7-30 வரை, சித்தம் தைப்பூசம், நல்ல கருமங்களை மேற்கொள்ளலாம்;
ராகு 5-05—6-32

தை 10 திங் (23-1-89) துவிதியை பி.இ. 6-05 வரை, ஆயிலியம் - சித்தம் இரவு 9-34 வரை, அசுபதினம். ராகு 8-06—9-33

தை 11 செவ் (24-1-89) திரிதியை முழுவதும், மகம் பி.இ. 12-06 வரை, சித்தம், கரிநாள், சுபதினமன்று. ராகு 3-36—5-03

தை 12 புத (25-1-89) திரிதியை காலை 8-17வரை, பூரம் பி.இ. 2-59 வரை, அமிர்தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 12-36—2-03

தை 13 வியா (26-1-89) சதுர்த்தி பகல் 10-49 வரை, உத்தரம் - மரணம் பி.இ. 6-04 வரை, அசுபதினம். ராகு 2-06—3-34

தை 14 வெ (27-1-89) பஞ்சமி பகல் 1-31வரை, அத்தம் முழுவதும், அமிர்தம். நற்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 11-06—12-34

தை 15 சனி (28-1-89) ஷஷ்டி மாலை 4-10வரை, அத்தம் காலை 9-10 வரை, மரணம், அசுபதினம்.
ராகு 9-36—11-04

தை 16 ஞா (29-1-89) ஸப்தமி மாலை 6-32வரை, சித்திரை பகல் 12-04 வரை, சித்தம், மாலை 6-32 க்குள் சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 5-06—6-34

தை 17 திங் (30-1-89) அஷ்டமி இரவு 8-24வரை, சுவாதி அமிர்தம் பகல் 2-32 வரை, சுபதினமன்று.
ராகு 8-06—9-34

தை 18 செவ் (31-1-89) நவமி இரவு 9-34வரை, விசாகம் - மரணம் மாலை 4-22 வரை, சுபதினமல்ல. ராகு 3-36—5-04

தை 19 புத (1-2-89) தசமி இரவு 9-58 வரை, அனுஷம் மாலை 5-28 வரை, அமிர்தசித்தம், சுப கருமங்களுக்கு உகந்ததினம்.
ராகு 12-36—2-04

தை 20 வியா (2-2-89) ஏகாதசி இரவு 9-32வரை, கேட்டை - மரணம் மாலை 5-47 வரை, ஸர்வஏகாதசிவிரதம், அசுபதினம். ராகு 2-06—3-34

தை 21 வெள் (3-2-89) துவாதசி இரவு 8-20 வரை. மூலம் - அமிர்தம் 5-20 வரை, மாலை 5மணிக்குள் அவசிய கருமங்கள் செய்யலாம்.
ராகு 11-06—12-34

தை 22 சனி (4-2-89) திரயோதசி மாலை 6-27 வரை, பூராடம், மாலை 4-12 வரை, சித்தம், சனிப்பிரதோஷவிரதம் சுபதினமன்று.
ராகு 9-36—11-04

தை 23 ஞா (5-2-89) சதுர்த்தசி மாலை 4-00வரை, உத்தராடம் பகல் 2-34 வரை, அமிர்தம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 5-05—6-33

தை 24 திங் (6-2-89) அமாவாசை பகல் 1-07 வரை, திருவோணம் பகல் 12-22 வரை, அமிர்த

சித்தம், அமாவாசைவிரதம், சுபதினமன்று. ராகு 8-05—9-33

தை 25 செவ் (7-2-89) பிரதமை - அவிட்டம் சித்தம் காலை 9-58 வரை, சந்திரதரிசனம், வயல் தோட்டச்செய்கைகள் மேற்கொள்ளலாம். ராகு 3-35—5-03

தை 26 புத (8-2-89) துவிதியை காலை 6-45வரை. சதயம் - சித்தம் காலை 7-28 வரை, திரிதியை மரணம் பி.இ. 3-32 வரை, பூரட்டாதி பி.இ. 5-00 வரை. அசுபதினம். ராகு 12-35—2-03

தை 27 வியா (9-2-89) சதுர்த்தி இரவு 12-50 வரை, உத்தரட்டாதி பி-இ. 2-43 வரை, சித்தம். சதுர்த்திவிரதம், அவசியகருமங்கள் செய்யலாம். ராகு 2-05—3-33

தை 28 வெ (10-2-89) பஞ்சமி இரவு 9-45வரை, ரேவதி இரவு 12-44 வரை, அமிர்தம், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 11-05—12-33

தை 29 சனி (11-2-89) ஷஷ்டி மாலை 7-14வரை, அசுவினி - சித்தம் இரவு 11-08 வரை, ஷஷ்டி விரதம், அவசியகருமங்கள் செய்யலாம். ராகு 9-35—11-03.

---

## பொங்கலோ பொங்கல்!

செல்வி பூங்கொடி அருளம்பலம்

கிழக்கு வெளுத்து எழில்
　வானக்குமரி கன்னம் ஒளிப்
பிழம்பு எனச் சிவந்துவிட
　அகில மெலாம் பூமலர
அழகு மகள் பார்மீது
　ஆதவன் கதிர் பரப்ப
முழங்கு தமிழோசை யுடன்
　தைப் பொங்கலோ பொங்கல்.

அறமெனும் பானை ஏற்றி
　அன்பெனும் பாலை ஊற்றி
மறவறுமை ஒழிக வென்று
　மண்ணுலகிற் பால் பொங்க
புறநானூற் றெளி சிறக்கும்
　பொறுமை மிகு ஏருழவர்
அறக் கதிரவனைப் போற்றும்
　அரும் பொங்கலோ பொங்கல்.

செங்கரும்பு தேன் கதலி
　இஞ்சியுடன் மஞ்சள் கொண்டு
எங்கெங்கும் பொங்கல் பொங்க
　எங்கள்தமிழ் புகழ் பொங்க
அங்கமெலாம் களி பொங்க
　ஆடிநறுந் தாள முடன்
மங்கையரும் காளையரும் பொங்கு
　மெழிற் பொங்கலோ பொங்கல்.

## சோதிடக்கலையின் புனிதத் தன்மை பேணப்படுமா?

சோதிடம் ஒரு தெய்வீகக்கலை. புனிதத் தன்மைமிக்கது. பாரம்பரியத்திற்கும் விதிமுறை கட்கும் உட்பட்டது. அதை அணுகுபவர்களும் கணிப்பவர்களும் புனிதத்தன்மை உடையவர்களாயும் தெய்வ அநுக்கிரகம் உள்ளவர்களாயு மிருக்க வேண்டும். ஆனல் அத்தகைய நிலைமாறி இன்று எல்லோரும் சாஸ்திரிகள், சோதிடர்கள் என்றும், நான்தான் சோதிடர் என்றும் நான் இங்கு வந்துள்ளேன் அயலவர்களையும் கூப்பிடுங்கள் என்று வருவாய்க்காகவும், போலிக்கௌரவத்திற்காகவும், சோதிடத்தின் நிலை வந்துள்ளமை கண்கூடு. இந்நிலை மாறிட வேண்டும். சோதிடக்கல்லூரியோ, அல்லது பல்கலைக்கழகத்தில் சோதிடத்திற்கென ஒரு தனிப்பிரிவோ ஆரம்பிக்கப்பட்டு சோதிடத்தின் தெய்வீகமும் புனிதத் தன்மையும் பேணப்பட சோதிட நிபுணர்களும், கல்விமான்களும் முன்வருவார்களா.

— சி. சபாநாதன், சங்கரத்தை.

---

இம்மாத...... (1-ம் பக்கத் தொடர்)

பூரணையுடன் பூசநன்ளும் அனேகமாக சேர்ந்தே வருவதுண்டு. சிவரூபமான சூரியபகவானுடன் சத்தியம்சமாகிய சந்திரன் ஒன்று சேர்வதும் இத் தினத்துக்கு மேலும் சிறப்பாகும். இறைவன் ஜல வடிவமாக உலகத்தைப் படைத்தது இத்தினத் திலென்றும் அதன் பின்னரே பிரம்மாண்டமான உலகம் வடிவம்பெற்றதென்றும் வரலாறுகள் கூறுகின்றன. ஜலத்திலிருந்து உலகம் தோன்றியதென் பதை நினைவூட்டவே சில சிவாலயங்களில் தெப் போற்சவம் நடைபெறுவதும், முருகனுலயங்களில் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வதும் பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திகளைத் தீர்ப்பதும் இத்தினச் சிறப்பாகும்.

# உதயலக்கினம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

## விபவ ஞு தை மீ 1-ந் தேதி முதல் 29 -ந் தேதி வரை. (14-1-89 முதல் 11-2-89 வரை)

| இங் ஜன | தமி தை | வாரம் | மகரம் ம.மி. முதல் (காலை) | மகரம் ம.மி. வரை | கும்பம் ம. மி. வரை (காலை) | மீனம் ம. மி. வரை (பகல்) | மேடம் ம. மி. வரை (பகல்) | இடபம் ம. மி. வரை (பி.ப) | மிதுனம் ம. மி. வரை (மாலை) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (இரவு) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலா ம. மி. வரை (பி.இ) | விருச்சி ம. மி. வரை (பி.இ) | தனுசு ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | சனி | 6 34 | 8 30 | 10 15 | 11 57 | 1 46 | 3 49 | 6 0 | 8 8 | 10 8 | 12 7 | 2 11 | 4 22 | 6 30 |
| 15 | 2 | ஞாயி | 6 30 | 8 26 | 10 11 | 11 53 | 1 42 | 3 45 | 5 56 | 8 4 | 10 4 | 12 3 | 2 7 | 4 18 | 6 26 |
| 16 | 3 | திங் | 6 26 | 8 22 | 10 7 | 11 49 | 1 38 | 3 41 | 5 52 | 8 0 | 10 0 | 11 59 | 2 3 | 4 14 | 6 22 |
| 17 | 4 | செவ் | 6 22 | 8 19 | 10 4 | 11 46 | 1 35 | 3 38 | 5 49 | 7 57 | 9 57 | 11 56 | 2 0 | 4 11 | 6 19 |
| 18 | 5 | புதன் | 6 19 | 8 15 | 10 0 | 11 42 | 1 31 | 3 34 | 5 45 | 7 53 | 9 53 | 11 52 | 1 56 | 4 7 | 6 15 |
| 19 | 6 | வியா | 6 15 | 8 11 | 9 56 | 11 38 | 1 27 | 3 30 | 5 41 | 7 49 | 9 49 | 11 48 | 1 52 | 4 3 | 6 11 |
| 20 | 7 | வெள் | 6 11 | 8 7 | 9 52 | 11 34 | 1 23 | 3 26 | 5 37 | 7 45 | 9 45 | 11 44 | 1 48 | 3 59 | 9 7 |
| 21 | 8 | சனி | 6 7 | 8 4 | 9 48 | 11 30 | 1 19 | 3 22 | 5 33 | 7 41 | 9 41 | 11 40 | 1 44 | 3 55 | 6 3 |
| 22 | 9 | ஞாயி | 6 3 | 8 0 | 9 45 | 11 27 | 1 16 | 3 19 | 5 30 | 7 38 | 9 38 | 11 37 | 1 41 | 3 52 | 6 0 |
| 23 | 10 | திங் | 6 0 | 7 56 | 9 41 | 11 23 | 1 12 | 3 15 | 5 26 | 7 34 | 9 34 | 11 33 | 1 37 | 3 48 | 5 56 |
| 24 | 11 | செவ் | 5 56 | 7 52 | 9 37 | 11 19 | 1 8 | 3 11 | 5 22 | 7 30 | 9 30 | 11 29 | 1 33 | 3 44 | 5 52 |
| 25 | 12 | புதன் | 5 52 | 7 48 | 9 33 | 11 15 | 1 4 | 3 7 | 5 18 | 7 26 | 9 26 | 11 25 | 1 29 | 3 40 | 5 48 |
| 26 | 13 | வியா | 5 48 | 7 44 | 9 29 | 11 11 | 1 0 | 3 3 | 5 14 | 7 22 | 9 22 | 11 21 | 1 25 | 3 36 | 5 44 |
| 27 | 14 | வெள் | 5 44 | 7 41 | 9 25 | 11 7 | 12 56 | 2 59 | 5 10 | 7 18 | 9 18 | 11 17 | 1 21 | 3 32 | 5 40 |
| 28 | 15 | சனி | 5 40 | 7 37 | 9 21 | 11 3 | 12 52 | 2 55 | 5 6 | 7 14 | 9 14 | 11 13 | 1 17 | 3 28 | 5 36 |
| 29 | 16 | ஞாயி | 5 36 | 7 33 | 9 17 | 10 59 | 12 48 | 2 51 | 5 2 | 7 10 | 9 10 | 11 9 | 1 13 | 3 24 | 5 32 |
| 30 | 17 | திங் | 5 32 | 7 29 | 9 14 | 10 56 | 12 45 | 2 48 | 4 59 | 7 7 | 9 7 | 11 6 | 1 10 | 3 21 | 5 29 |
| 31 | 18 | செவ் | 5 29 | 7 25 | 9 10 | 10 52 | 12 41 | 2 44 | 4 55 | 7 3 | 9 3 | 11 2 | 1 6 | 3 17 | 5 25 |
| பெப் 1989 1 | 19 | புதன் | 5 25 | 7 21 | 9 6 | 10 48 | 12 37 | 2 40 | 4 51 | 6 59 | 8 59 | 10 58 | 1 2 | 3 13 | 5 21 |
| 2 | 20 | வியா | 5 21 | 7 17 | 9 2 | 10 44 | 12 33 | 2 36 | 4 47 | 6 55 | 8 55 | 10 54 | 12 58 | 3 9 | 5 17 |
| 3 | 21 | வெள் | 5 17 | 7 13 | 8 58 | 10 40 | 12 29 | 2 32 | 4 43 | 6 51 | 8 51 | 10 50 | 12 54 | 3 5 | 5 13 |
| 4 | 22 | சனி | 5 13 | 7 9 | 8 54 | 10 36 | 12 25 | 2 28 | 4 39 | 6 47 | 8 47 | 10 46 | 12 50 | 3 1 | 5 9 |
| 5 | 23 | ஞாயி | 5 9 | 7 5 | 8 50 | 10 32 | 12 21 | 2 24 | 4 35 | 6 43 | 8 43 | 10 42 | 12 46 | 2 57 | 5 5 |
| 6 | 24 | திங் | 5 5 | 7 1 | 8 46 | 10 28 | 12 17 | 2 20 | 4 31 | 6 39 | 8 39 | 10 38 | 12 42 | 2 53 | 5 1 |
| 7 | 25 | செவ் | 5 1 | 6 56 | 8 41 | 10 23 | 12 12 | 2 15 | 4 26 | 6 34 | 8 34 | 10 33 | 12 37 | 2 48 | 4 56 |
| 8 | 26 | புதன் | 4 56 | 6 52 | 8 37 | 10 19 | 12 8 | 2 11 | 4 22 | 6 30 | 8 30 | 10 29 | 12 33 | 2 44 | 4 52 |
| 9 | 27 | வியா | 4 52 | 6 48 | 8 33 | 10 15 | 12 4 | 2 7 | 4 18 | 6 26 | 8 26 | 10 25 | 12 29 | 2 40 | 4 48 |
| 10 | 28 | வெள் | 4 48 | 6 45 | 8 30 | 10 12 | 12 1 | 2 4 | 4 15 | 6 23 | 8 23 | 10 22 | 12 26 | 2 37 | 4 45 |
| 11 | 29 | சனி | 4 45 | 6 41 | 8 26 | **10 8** | **11 57** | 2 0 | 4 11 | 6 19 | 8 19 | 10 18 | 12 22 | 2 33 | 4 41 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய லக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: தை மீ 29 உ. (11-2-89) பகல் 11-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-08 —11-57) மேடலக்னம்

# தை மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | செவ் | குரு | |
| கும்பம்: ராகு | தை மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம்: புத, சூ | | | சிங்கம்: கேது |
| சனி, யுரே, சுக், நெப் | | | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

16உ (29-1-89) இரவு 10-07க்கு மகர-சுக்
4உ புதன் வக்ராரம்பம்
7உ ,, அஸ்தமனம்
17உ ,, உதயம்
25உ ,, வக்ரத்தியாகம்
8உ குரு வக்ரத்தியாகம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | 1உ | (14-1-89) | மாலை | 6-18 | முதல் | மேடம் |
| | 3உ | (16-1-89) | இரவு | 10-20 | ,, | இடபம் |
| | 5உ | (18-1-89) | பி.இ | 3-58 | ,, | மிதுனம் |
| | 8உ | (21-1-89) | பகல் | 11-35 | ,, | கடகம் |
| | 10உ | (23-1-89) | இரவு | 9-34 | ,, | சிங்கம் |
| | 13உ | (26-1-89) | காலை | 9-44 | ,, | கன்னி |
| | 15உ | (28-1-89) | இரவு | 10-39 | ,, | துலாம் |
| | 18உ | (31-1-89) | காலை | 9-58 | ,, | விருச்சிகம் |
| | 20உ | (2-2-89) | மாலை | 5-47 | ,, | தனுசு |
| | 22உ | (4-2-89) | இரவு | 9-49 | ,, | மகரம் |
| | 24உ | (6-2-89) | இரவு | 11-12 | ,, | கும்பம் |
| | 26உ | (8-2-89) | இரவு | 11-36 | ,, | மீனம் |
| | 28உ | (10-2-89) | இரவு | 12-43 | ,, | மேடம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி தை மீ 29 உ பகல் 11-00 மணிக்கு மேட லக்னம் என அறிந்து கொண்ட பின் 'மேடம், என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1 முதல் 12 வரை இலக்கமிடுக,

### மாதபலன்

மாதம் பிறக்கும்போது விருச்சிகம் உதயலக்னமாக அமைகிறது, இலக்கினதிபதி செவ்வாய் 6-ம் வீட்டில் ஆட்சிபெறுவதும், குரு லக்கினத்தை நோக்குவதும், சந்திரன் 5-ம் வீட்டில் இருப்பதும் பொதுவாக நன்மை பயக்கக்கூடியதாகும். சமுதாயச் சீர்திருத்தங்கள், நிர்வாகம், புனரமைப்பு போன்றவை சிறப்படையும். மக்களிடையே உற்சாகம் காணப்படும்.

# தை மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

14-1-89—11-2-89

சூரியன்:- 13-1-89 பி. இ. 3-13
மகரராசிப் பிரவேசம்.
14-1-89 உதயம் காலை 6-34
14-1-89 உச்சம் பகல் 12-19
14-1-89 அஸ்தமனம் மாலை 6-03
28-1-89 உதயம் காலை 6-36
28-1-89 உச்சம் பகல் 12-23
28-1-89 அஸ்தமனம் மாலை 6-10

சந்திரன்:- 21-1-89 பூரணை பி.இ. 3-04
6-2-89 அமாவாசை பகல் 1-07
7-2-89 சந்திரதரிசனம்.

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் மேல் மேற்கு வானில் 18 பாகை உயரத்தில் காணப்படும இக்கிரகம் நாளாந்தம் உயரம் குறைந்து 17-1-89ல் வக்கிரகதியில் செல்லத் தொடங்கி 20-1-89ல் மேற்கில் அஸ்தமனமடையும். மீண்டும் 30-1-89ல் கிழக்கில் உதயமாகும். 7-2-89ல் நேர்கதியில் செல்லத் தொடங்கும். மாத முடிவில் சூரியோதயம் முன் கிழக்கு வானில் 25 பாகை உயரத்தில் காணப்படும். இம்மாதம் முழுவதும் மகரராசியிலே சஞ்சரிக்கிறது.

சுக்கிரன்: மாதத் தொடக்கத்தில் சூரிய உதயம் முன் கிழக்கு வானில் 20 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 13 பாகை உயரத்தில் காணப்படும். 29-1-89ல் மகரராசியில் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் உச்சிக்கு கிழக்கே 4 பாகை தூரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் உச்சிக்கு மேற்கே 10 பாகை சரிந்து காணப்படும். இம் மாதம் மேடராசியிலேயே சஞ்சரிக்கும்,

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் கிழக்கு வானில் 57 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் உச்சிக்கு கிழக்கே 5 பாகை சரிவில் காணப்படும். 21-1-89ல் வக்கிரகதி நீங்கி நேர்கதியில் செல்லும்.

சனி: மாதத் தொடக்கத்தில் சூரிய உதயத்தின் முன் கிழக்கு வானில் 16 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 42 பாகை உயரத்தில் காணப்படும். இது இம்மாதம் தனு ராசியிலேயே சஞ்சரிக்கிறது.

யுரேனஸ்: தனுராசியிலே சஞ்சரிக்கிறது.
நெப்டியூன்: தனுராசியிலே சஞ்சரிக்கிறது.
புளூட்டோ: துலாராசியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமங்கள்

14-1-89 நடு இரவு 12 மணியளவில் சந்திரனுக்கு தெற்கு செவ்வாய் 2½ பாகை. சந்திர அஸ்தமனத்தின் முன் அவதானிக்க,

16-1-89 நள்ளிரவு சுக்கிரனுக்கு வடக்கு சனி ½ பாகை. விடியற்காலை 5 மணியளவில் கிழக்கு வானில் அவதானிக்கவும்.

16-1-89 பின்னிரவு சந்திரனுக்குத் தெற்கு வியாழன் 6 பாகை. விடியற்காலையில் அவதானிக்கவும்.

24-1-89 முன்னிரவு சந்திரனல் மக நட்சத்திரம் கிரகணமடையும்.

3-2-89 முன்னிரவு சந்திரனுக்கு தெற்கு சனி 5 பாகை. விடியற்காலை அவதானிக்கவும்.


4-2-89 நடு இரவு சந்திரனுக்கு வடக்கு புதன் 6 பாகை. விடியற்காலையில் அவதானிக்கவும்.

5-2-89 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 2½ பாகை. அன்று சூரியோதயம் முன் அவதானிக்கவும்.

## வாசகர் கடிதம்

மார்கழி மாதச் சோதிடமலரில் தாங்கள் என் கவிதையை வெளியிட்டுப் பெருமையான செயலைச் செய்துதவி, சாஸ்திரிகளின் மகிமையை உயர்த்தியமைக்கு மிக்க நன்றி.

சி. சபாநாதன், சங்கரத்தை.




**இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.**

**14-1-89 முதல் 11-2-89 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 10ல் லோகமூர்த்தியாக வலம்வருவது நன்மைதீமைகள் கலந்த பலன்கள் நிகழும். தேகசுகம் சீராக இருக்கும்; பொருள் வருமானத்துச் செலவுகளும் இருக்கும். இராசாங்க உதவிகள் பெறுவதில் தடைதாமதங்கள், கஷ்டங்கள் ஏற்படும். கடந்தமாதம் போல் காரியசித்தி பெறுவதும் கஷ்டம்; பெரியவர்கள், உறவினர்கள், புத்திரர் முதலியவர்களின் உதவி ஒத்தாசைகளால் எதனையும் சமாளித்துக் கொள்ள முடியும். இராசி அதிபன் செவ்வாய் ஆட்சி வலிமையுடன் சென்மத்தில் இருப்பதால் உடல்நலம் பாதிப்படையவும் கூடும். எனினும் காணி, இயந்திர. இராசாயனம் மருந்து முதலியவற்றால் வருமானம் கூடும்.

குடும்பத்தானத்தில் குரு இருப்பதால் குடும்பத்தில் அமைதியும் நிறைவும் பெரும்பாலும் ஏற்பட வேண்டும். குடும்பவருமானமும் அதிகரிக்கும். புத்திரர் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால வியாபார முன்னேற்றம் தொடரும். முதலீடுகளிலும் வருமானம் வரத்தொடங்கும். பழைய கடன் நிலுவைகள் கூட அறவிட்டுக் கொள்ள முடியும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலமின்மையால் மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிடைப்பது கஷ்டம். பதவி உயர்ச்சி முதலியன கிடைப்பதும் அரிதே.

விவசாயிகளுக்குப் பயிர்விளைச்சல் கூடும். விவசாயப்பண்ணைகளிலும் நல்ல விளைச்சல் ஏற்படும். விளைவுதானியங்களுக்கு நல்ல சந்தைவாய்ப்பும் கிடைக்கும். பொதுவாக இவர்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.


தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் இந்த மாதமும் கிடைக்கும். வேலைகொள்ளுவோருக்கும் தொழிலாளர்களுக்கு மிடையில் சச்சரவுகள் ஏற்பட்டாலும் போதிய வருமானமும் பெறுவர்.

மாணவர் கல்வி வளர்ச்சி இந்த மாதமும் தொடரும், சிறப்புச் சித்திகள், புலமைப்பரிசில்கள் கூடச் சிலருக்குக் கிடைக்கும். கணிதத்துறை விஞ்ஞானத்துறை மாணவர்கள் முன்னேற்றம் விசேடமாகப் பெறுவர்.

பெண்கள் வாழ்வில் நல்ல முன்னேற்றங்களை இந்தமாதமும் தொடர்ந்து காணுவர். விவாகாதி முயற்சிகளிலும் மனநிறைவுடன் வெற்றியும் பெறுவர்.

அதிஷ்டநாட்கள்;- ஜன.,15,16,19,20,21,24,25
பெப்.2,3,4,7,8,11

துரதிஷ்டநாட்கள்:-ஜன.14,26 27,28'31
பெப்.1,,9,10




கார்த்திகை, 2,3,4 ரோகிணி, மிருகசிரிடம் 1,2ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 9ல் சுவர்ணமூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் தானபலம் குறையினும் மூர்த்தி பலம்பெறுவது நன்மையாகும். இவர்களின் தேக நலம் சீராக இருக்கும். கடந்தகாலங்களில் பட்ட கஷ்டநஷ்டங்களிலிருந்து சிறிதுசிறிதாக விடுவிக்கப்படுவார்கள். பொருள் வருமானமும் அதிகரிக்கத் தொடங்கும். இழுபறியில் இருந்த காரியங்களில் வெற்றியும் பெறுவர். இராசாங்க அதிகாரிகளின் உதவிகளும் கிடைக்கும். எனினும் அட்டமத்துச் சனீஸ்வரனின் காலமும் 12ல் செவ்வாயின் கோசாரமும் ஜென்மத்தில் குருவுமாகச் சஞ்சரித்தலால் எதிர்பார்த்த சுபபலன்கள் நிகழுவதும் கஷ்டமே.

குடும்பத்தில் சுகவீனம் முதலியன இடைக்கிடை ஏற்படும். பொருள் வருமானமும் குறைவுறும். இனசன பந்துக்களுடன் பகைவிரோதங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரி புதன் பலம் குன்றுவதால் வியாபார முன்னேற்றம் குன்றும். கடன் நிலுவைகளால் மனக்கவலைகள் கூட ஏற்படக் கூடும். நிதி நெருக்கடிகளும் உண்டாகும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்களும், ஒத்துழைப்புக்களும் ஒருசேரக் கிடைக்கும். வேலைப்பொறுப்புக்கள் குறைந்தாலும் உத்தியோக சம்பந்தமான அனுஷங்கியச் செலவுகளையும் சமாளிக்க வேண்டியிருக்கும்.

விவசாயிகளுக்கு சனி அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதால் பயிர் உற்பத்திச் செலவுகள் இந்தமாதமும் கூடவே செய்யும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைப்பது கடினம்.


தொழிலாளிகளுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் தொடரும். கிடைக்கும் வேலைகளுக்கும் உரிய ஊதியம் பெறுவதும் கடினமே. தினச்சம்பளம் பெறுவோரின் நாளாந்த சீவியத்துக்கும் கஷ்டம் ஏற்படும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை தொடர்ந்தாலும் படிப்படியாக கல்வி முன்னேற்றத்திற்குரிய காரணிகள் ஏற்படத் தொடங்கும். ஆசிரியர், மாணவர் மத்தியில் கருத்து வேறுபாடுகளும் நீங்கத் தொடங்கும்.

பெண்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் மனநிறைவான காரியங்கள் நிகழும் சாத்தியக்கூறுகள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்பு கிடைக்காது.

அதிஷ்டநாட்கள்:- ஜன.,17,18,19,21,22,23
பெப்.5,6,9,10

துரதிஷ்டநாட்கள்:- ஜன.14,15,16,28,29,30,31
பெப்.2இர,3,4,11




மிருகசிரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுனராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 8ல் (அட்டமத்தில்) தாம்ரமூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் சுபபலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. தேகசுகம், குடும்பசுகம் இடைக்கிடை பாதிக்கப்படும். பொருள் வருமானமும் வீழ்ச்சியுறும். வருவாயிலும் மிஞ்சிய செலவுகளால் கடன் பயமும் ஏற்படும். உற்றார், உறவினர்களுடன் தேவையற்ற பகைவிரோதங்கள் கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. எந்தமுயற்சியிலும் தடைதாமதம் அலைச்சல், வீண்விரையம் முலலியவற்றின் மூலமே

கைகூட முடியும். இராசாங்க தொல்லைகளும் ஏற்படக்கூடும்,

குடும்பத்தில் அமைதிக்குறைவுகள் ஏற்படும். மனைவி மக்கள் முதலியோரின் சுகவீனங்களால் செலவுகள் அதிகரிக்கும். குடும்பவருமானத்தில் பற்றுக்குறைவு ஏற்படும்.

வர்த்தகர்களுக்குப் புதன் கோசார சஞ்சார பலம் பெற்றாலும் மாதத்தில் பெரும்பகுதி நாட்களில் வக்கிரகதியும் அஸ்தமனமும் பெறுவதால் வியாபார முன்னேற்றம் பெரும்பாலும் தடைப்படும். நிதி நெருக்கடிகள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்குத் தலைமை அதிகாரிகளால் நெருக்குதல்கள் ஏற்படும. வேலைப்பழுவும் கூடுவதோடு, உத்தியோக சம்பந்தமான வீண் செலவுகளும் ஏற்படும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் கூடினாலும் அதிக நட்டம் வராது. கூலியாட்களின் ஒத்துழைப்பும் ஓரளவு கிடைக்கும். விவசாயப் பண்ணைகளிலும் அதிக நட்டம் வராது.

தொழிலாளருக்குள் பலப்பல பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றிமறையும். வேலைக்குஏற்ப சம்பளம் கிடைப்பதும் அரிது. நாள் சம்பளம் பெறுவோரின் நாளாந்த சீவியமும் கஷ்டம்தரும்.

மாணவர் கல்விக்குழப்ப நிலையிலும் சுய முயற்சியால் முன்னேற்றம் பெறுவார்கள். கலைத்துறை, கணிதத்துறை மாணவர்களுக்கு முன்னேற்றம்பெற வாய்ப்புக்கள் கிட்டும்.

பெண்களுக்கு - முக்கியமாகக் குடும்பப்பெண்களுக்குக் குடும்பபாரம் பொறுப்பதால் துன்பங்கள் ஏற்படும். கன்னிப்பெண்களின் காதல் விவகாரங்கள் விவாகாதி முயற்சிகள் கஷ்டம் தரும்.

அதிஷ்டநாட்கள்: ஜன. 14,15,16,19கா,20,21,24
பெப்: 7,8,11

துரதிஷ்டநாட்கள்: ஜன. 17,18,19அ.கா,31பகல்
பெப். 1,2பக,5,6



## கடகம்

புனர்பூசம் 4ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் ராஜஸ மூர்த்தியாகி வலம் வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தான பலம் குறைவதால் நன்மை தீமைகலந்த பலன்களே நிகழும். தேகசுகம் பொதுவாகச் சீராக இருப்பினும் குடும்பசுகம் பாதிக்கச் செய்யும். பொருள்வருமானம் கூடும், எனினும் செலவுகளும் கூடும். உறவினர் - நண்பர்கள் முதலியோருடன் பகைவிரோதங்கள் கூடஏற்படும். சுக்கிரன் பலம் குறைவதால் களத்திரதுன்பம் வீடு, வாகனநட்டம் எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் முதலானவையும் ஏற்படக்கூடும். ஆனல் குரு சனி இவர்களின் சுபகோசார சஞ்சாரம் நிகழுவதால் எதனையும் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும்.

குடும்பத்தவர்களுக்கு களத்திர சுகவீனம் இடைக்கிடை ஏற்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் கூடும். புத்திரர் - உறவினர் பெரியவர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதம் வியாபாரம் மந்தநிலை அடையும். ஆனல் நிதிநிலைமை சீராக இருக்கும்: வாடிக்கையாளர் வரவும் குறையும்; முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியடையும்.

உத்தியோகத்தர்களுக்குமேலதிகாரிகளின்நல்ல பிப்பிராயங்கள் ஏற்படும். பதவியுயர்ச்சி முதலினயவும் கிடைக்கலாம். சகஉத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக்களும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் சனியின் சுபகோசார சஞ்சாரம் நிகழுவது நன்மையாகும். பயிர்விளைச்சல் அதிகரிக்கும். விவசாயப்பண்ணைகளிலும் நல்ல லாபம் கிடைக்கும்.

தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பும் நல்லிணக்கமும் ஏற்படும். வேலைவசதிகளும் கிடைக்கும். தினச்சம்பளம் பெறுவோருக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தொடரும். புலமைப்பரிசில்கள், வெளிநாடுகளில் கல்வி வாய்ப்பு, உயர்கல்விப்பேறு முதலான சிறப்புக்களையும் சிலர் பெறுவர்.

பெண்களுக்கு மனநிறைவு இந்த மாதமும் தொடரும். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகளும் பெரும்பாலும் கைகூடும். குடும்பப் பெண்களும் தங்கள் எண்ணங்களைச் சுலபமாக நிறைவேற்றி மகிழ்வார்கள்.

அதிஷ்டநாட்கள்:- ஜன.14,17,18,19,,22,23
பெப்.1,2பகல்,9,10

துரதிஷ்டநாட்கள்:- ஜன.19,20,21மு.ப
பெப்.2இர,3,4,7,8.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசிக்காரருக்கு இந்த மாதம் சூரியபகவான் 6ல் லோகமூர்த்தியாகி வலம் வருகின்றார். சூரியன் தானபெலம் பெற்றாலும் மூர்த்திபலம் பெருமையால் நன்மை தீமைகலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். இவர்களின் தேகசுகம் இடைக்கிடை குன்றும். பொருள் வருமானமும் குறைவுபடும். எந்தமுயற்சிகளும் இழுபறியில் முடிவு தெரியாமல் துன்பம் தரும். இராசாங்க உதவிகள் கூடக்கிடைப்பதும் கஷ்டமே. புத்திரர் வழியில் கவலைகளும் - செலவுகளும் சிலருக்கு ஏற்படும். உறவினர் நண்பர்களுடன் கருத்துவேறுபாடுகளும் பகைவிரோதங்களும் ஏற்படும். தன் குடும்பத்தில் சுபமங்கள கொண்டாட்டங்கள் நிகழுவதும் கஷ்டமே!

குடும்பத்தில் சச்சரவுகள் இடைக்கிடை ஏற்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் கூடுவதால் கடன்பயமும் ஏற்படும். பந்து மித்திரர்களுடன் பகைவிரோதங்கள் கூட ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு புதனின் சஞ்சாரபலம் இருப்பதால் வியாபாரமுன்னேற்றம் காணும். ஆனால் நிதிநெருக்கடிகள் ஏற்படவே செய்யும், பழையநிலுவைக் கடன்களை அறவிடமுடியாது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படும். எவ்வளவு கடமை உணர்ச்சியுடன் வேலைசெய்தாலும் மேலதிகாரிகள் இவர்களில் குற்றம் கண்டுபிடிக்க முயலுவார்கள்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் பயிர்ச்சேதம் அதிகரிக்கும். உற்பத்திச் செலவுகள் கூடுவதால் விளைச்சலில் லாபம்கிடைப்பது கஷ்டம். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும்.

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் குறையும். வேலைகொள்ளுவோருக்கும் இவர்களுக்கும் இடையில் அடிக்கடி பிணக்குகள் ஏற்படும்.

மாணவர் கல்வி கடந்தமாதங்களிலும் பார்க்க இந்தமாதம் சற்று முன்னேற்றம் காணும். புதன் வக்கிரகதியிலும் அஸ்தமனத்திலும் சஞ்சரித்தாலும் ஜே சாரசஞ்சாரபலம் பெறுவதால் கல்விமுன்னேற்றம் தடைப்பட முடியாது.

பெண்களுக்கு மாதச்சுகவீனங்களில் சிக்கல்களும் சிலருக்கு ஏற்படும். கன்னிப்பெண்களுக்கு விவாகமுயற்சிகள் முடிவில்லாமல் நீளும். குடும்பப் பெண்களுக்குப் பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஜன. 14,19,20,21,24,25,26
பெப். 2இரவு.3,4,11

துரதிஷ்டநாட்கள்; ஜன. 14பகல்,21பி:ப,22,23
பெப். 5,6



# கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை, 1,2ம் கால்

கன்னியா இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 5ல் தாம்பரமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கிறார். சூரியன் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நல்ல பலன்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால் குருவின் சுபகோசாரசஞ்சார பலமும் திருஷ்டியும் பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் இடைக்கிடை குன்றும். பொருள் வருமானம் சுமாராக வந்தாலும் செலவுகளும் அதற்கு ஏற்படுவதால் நிதிப் பற்றுக்குறைவுகள் ஏற்படும். எதுவரினும் புத்திரர், உறவினர்கள், குரு முதலான பெரியவர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதால் சமாளித்துக் கொள்ளுவார்கள். தன் வீட்டில் அல்லது குடும்பத்தில் சுபமங்கள கொண்டாட்டங்கள் கூட நிகழக்கூடும்.

குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் அவ்வப்போது ஏற்படினும் மனநிறைவும் அமைதியும் பெரும்பாலும் நிலவும். குடும்பப் பெரியவர்கள் புத்திரர்கள் முதலியோரின் உதவிகள் ஒத்தாசைகள் பெரிய ஆறுதல் தரும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதமும் வியாபார மந்தநிலை நீடிக்கும். முதலீடுகளின் வருமானமும் வீழ்ச்சியுறும். கடன் நிலுவைகளைக் கூடக்குறைத்துக் கொள்ளுவது நல்லது.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் மேலதிகாரிகளின் நெருக்குதல்களுக்குள்ளாக வேண்டியிருக்கும். சிலர் கஷ்டப்பிரதேச இடமாற்றம், பதவி இறக்கப் பயமுறுத்தல்களுக்குள்ளாகவும் கூடும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சலில் லாபம் இல்லாவிட்டாலும் நட்டம் வராது. விவசாயப் பண்ணைகளிலும் லாபம் குறையும். குறைந்த விளைவாக இருந்தாலும் நல்ல சந்தை வாய்ப்புக் கிடைப்பதால் தப்பிக் கொள்ளுவார்கள்.

தொழிலாளர் நாளாந்த சீவனத்துக்குப் போதிய வருமானம் பெறுவர். வேலைவசதிகளும் கூடும். எனினும் வேலைகொள்ளுவோருடன் பிணக்குகளும் ஏற்படும். இயந்திரப் பொறியியலாளர் முதலியோர் தொழிலுடன் சம்பந்தமான விபத்துக்கள், அவமிருத்துக்களைக்கூட அடையக்கூடும்.

மாணவர் கல்வி முன்னேற்றத்துக்கு தடைக் காரணிகள் தோன்றக்கூடும். ஆசிரியருடன் மாணவர் கருத்து வேறுபாடுகளும் ஏற்படும். கல்வித் தேர்ச்சியிலும் குறைவு ஏற்படும்.

பெண்களுக்கு இந்த மாதம் சாதகமாக அமைவது கடினம். விவாகாதி முயற்சிகள் சிரமத்துடன் சித்தியாகலாம். குடும்பப் பெண்களுக்குச் சிக்கல்கள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்:- ஜன.17,18,19,21,22,23,26
பெப்.1,2பக.5,6

துரதிஷ்டநாட்கள்:- ஜன.14,15,16,24,25,26
பெப்.7,8,11




சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 4-ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்துடன் வலம்வருவது நன்மைதரும். இவர்களின் தேகசுகம், குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். இராசாங்க அதிகாரிகளால் நன்மைகள், பொருள் வருமானம் அதிகரிப்பு, வீடு. வாகன விருத்தி. பூமிலாபம் முதலான ராசயோக பலன்கள் நிகழவேண்டும். செவ்வாய் 7 லும் குரு அட்டமத்திலுமாகத் துர்க்கோசாரசஞ்சாரம் செய்தலின் வயிற்றில் வியாதி விபத்து அவமிருத்துப் பயம் முதலிய கெட்ட பலன்கள் நிகழும்.

குடும்பசுகவீனங்கள் அல்லது சச்சரவுகள் இடைக்கிடை தோன்றி மறையும். குடும்ப வருமானமும் செலவும் சரியாக இருக்கும். புத்திரர் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதும் சந்தேகமே!

வர்த்தகர்களுக்கு இந்த மாதம் வியாபாரம் சுறுசுறுப்புடன் நடக்கும். நிதிப்பற்றுக்குறைவுகள் இருப்பினும் வாடிக்கையாளரின் ஆதரவில் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

உத்தியோகத்தர்களுக்கு பதவிச் சிறப்பு அல்லது பதவி உயர்வு முதலியனவும் கிடைக்கச் சாதகமான காலம். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் சிபார்சுகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு சனி பகவான் சுபகோசார சஞ்சாரம் செய்தலின் இந்தமாதமும் பயிர்விளைச்சல் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் பெறும். விவசாயப்பண்ணைகளிலும் நல்ல லாபம் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு போதிய வருமானம் பெறக்கூடியதாய் வேலைவசதிகள் கிடைக்கும். நாள் சம்பளம் பெறுவோருக்கும் நல்ல சீவியம் ஏற்படும். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை வளரும்.

மாணவர் கல்வித் தேர்ச்சி குறிப்பிடக்கூடியவாறு முன்னேறும், வைத்தியத்துறை, கணிதத்துறை மாணவர் சித்தி பெறுவர். ஆசிரியர்-மாணவருக்கிடையில் கருத்துவேறுபாடுகள் அவ்வப்போது தோன்றிமறையும்.

பெண்களுக்கு 7ல் செவ்வாயும் 8ல் வியாழ பகவானும் இருப்பதால் அதிகம் நன்மைகள் தடைப்படும். குடும்பப்பெண்களுக்கு களத்திரபிணி பீடை முதலான துன்பங்கள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்:- ஜன.19,20,21,24,25,26,28
பெப்.2இர,3,4,7,8

துரதிஷ்டநாட்கள்:- ஜன.14பக,17,18,19,26
பெப்.9,10




விசாகம் 4-ம் கால் அனுஷம், கேட்டை

விருச்சிக இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 3ல் ரஜதமூர்த்தியாகப் பலத்துடன் வலம்வருவது நன்மையாகும். தேகசுகம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் கூடும். வீடு, வாகனச்சிறப்பு, பூமிலாபம். காரிய சித்தி, தூரதேசப் பொருள்வரவு, இனசனப்பந்

துக்கள் கொண்டாட்டம், சுபமங்கள கொண்டாட்டங்கள், களத்திர - புத்திரர் சிறப்பு, வீட்டில் லட்சுமிகரம் முதலான சுபபலன்கள் அதிகம் நிகழும். செவ்வாயும் - வியாழபகவானும் சுபகோசாரசஞ்சாரம் செய்வதும் மேற்கூறிய பலன்களுக்கு சாதகமாகும்.

குடும்பத்தில் நல்ல மகிழ்ச்சியான மனஅமைதி பெரும்பாலும் கிடைக்கும். புத்திரர், பந்துக்களின் உதவிஒத்தாசைகளும் கிடைக்கும். வீட்டில் விவாகாதி சுபகொண்டாட்டங்கள்கூட நிகழலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். நிதிநிலையும் சீராக இருக்கும். நிலுவைக் கடன்கள் இழுபறியில் இருக்கும். வாடிக்கையாளர் வரவு திருப்திதரும்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்ச்சி முதலான சிறப்புக்கள் கிடைக்கும். உடன்உத்தியோகத்தர்களின்உதவிகள்ஒத்தாசைகளும் கிடைக்கும். இவர்களின் வாழ்கைத்தரமும் உயரும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் விளைச்சலும் கணிசமானவரை கூடும். விவசாயப் பண்ணைகளில் நட்டம் ஏற்படாது.

தொழிலாளர் பெரும்பாலும் வேலைவசதிகள் பெறுவர். அவர்களின் நாளாந்த சீவியத்தக்குப் போதுமான வருமானமும் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்விக்குழப்பநிலை நீங்கும். மாணவர் மத்தியில் புத்துணர்வும் புத்தூக்கமும் ஏற்படும். ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பும் வளரும். சட்டத்துறை,கலைப்பீட மாணவர் சித்தியடைவர்.

பெண்களுக்கு மனநிறைவான மாதம். இவர்களின் விருப்பங்கள் பெருமளவில் நிறைவாகும். கன்னிப்பெண்களின் விவாகமுயற்சிகளும் பெரும்பாலும் கைகூடும்.

| | |
|---|---|
| அதிஷ்டநாட்கள்:- | ஜன.14பக,21,22,23,26,27 பெப்.1.2பக.5,6,9,10 |
| துரதிஷ்டநாட்கள்:- | ஜன.,15.16,19,20,21,28 பெப்.11 |



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றார். மற்றும் பிரதான கிரகங்களான செவ்வாய், வியாழன், சனி இவர்களின் துர்க்கோசார சஞ்சாரமும் நிகழுகின்றது. பொதுவாக இவர்கள் இந்தமாதம் சுபபலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. இவர்களின் உடல்நலம், குடும்பநலம் எல்லாம் இடைக்கிடை பாதிப்படையும். எதிர்பார்க்கும் பொருள் வருமானமும் வராது. குடும்பத்தில் அமைதியின்மையும், சச்சரவுகளும் இடைக்கிடை நிலவும். முன்பு அலைச்சல் மூலம் பெற்ற காரியசித்திகள்கூட இந்தமாதத்தில் ஏமாற்றந்தரும். இனபந்துக்களுடன் பகைவிரோதங்களும் ஏற்படும்.

குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகளால் குழப்பநிலைகள்கூடத் தோன்றும். கணவன் மனைவியருக்குள் பிணக்குகளும் உண்டாகும். புத்திரர் துன்பந்தருவர். குடும்பவருமானமும் வீழ்ச்சியுறும்.

வர்த்தகர்களுக்கு (புதன் கோசாரசஞ்சாரபலம்பெற்றாலும் அஸ்தமனமும் வக்கிரகதியுமடைவதால்) இந்தமாதமும் சுமாராக நடக்கும். முதலீடுகளில் வருமானம் குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள்கூட ஏற்படும். சிலர் தம் பதவிகளைவிட்டு விலகிப்போனாலும் ஆச்சரியமில்லை. இவர்களின் வருமானக்குறைவால் அவலமடைவர்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் பெரிதும் குன்றும். குத்தகை விவசாயிகள் செலவுசெய்த முதலீட்டுத்தொகையை ஈடுசெய்ய முடியாது திண்டாடுவர். விவசாயப்பண்ணைகளில் நட்டம் ஏற்படும்.

தொழிலாளர் வேலைவாய்ப்புக்கள் குறைவதால் வருமானமின்றித் தவிக்கநேரிடும். தினச்சம்பளம் பெறுவோரின் நாளாந்த சீவியமே கஷ்டம் தரும். ஒப்பந்தவேலைகளிலும் லாபம் கிடைக்காது

மாணவர் கல்வியில் ஊக்கம் காட்டுவர். ஆசிரியர்கள் இவர்களுக்கு உற்றபோது உறுதுணைசெய்வர். எவ்வளவு முயற்சி எடுத்தாலும் சீரற்ற சூழ்நிலைகளால் பரீட்சைக்குத் தோற்றமுடியாமலும் போகநேரிடும்.

பெண்கள் மனக்குமுறல்களுடன் இந்த மாதமும் வாழ்வைத்தொடர வேண்டும்.குடும்பப்பெண்கள் குடும்பத்தொல்லைகளால் தாங்கமுடியாது துயருறவும் கூடும்.

| | |
|---|---|
| அதிஷ்டநாட்கள்:- | ஜன.14,15,16,24,25,26.28 பெப்.2இர,3,4,7,8,11 |
| துரதிஷ்டநாட்கள்:- | ஜன.17,18,19,22,23 பெப்.1,2பக. |



## மகரம்

உத்தராடம் 2,3,4 திருவோணம் அவிட்டம் 1,2

இந்த இராசியில் சென்மமானவர்களுக்குச் சூரியபகவான் (சென்மத்தில்) 1ல் தாம்பரமூர்த்தியாக இந்தமாதம் சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் பலம்குறைவதால் அதிகம் சுபபலன்களை எதிர்பார்க்க முடியாதுதான். இந்தராசியை குருபகவான் திருஷ்டி செய்வதால் நன்மைதீமை கலந்த பலன்கள் நிகழவேண்டும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். நல்லபொருள் வருமானமும்வரும், அலைச்சல் மூலம் காரியசித்தியும் பெறுவர். தன்வீட்டில் அல்லது உறவினர்களுக்குள் சுபகொண்டாட்டங்கள் கூட நிகழலாம். இனசனபந்துக்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும். குரு முதலிய பெரியவர்கள், புத்திரர்கள் உதவிகளும் ஒத்தாசைகளும் கிடைக்கும்.

குடும்பத்தில் சச்சரவுகளும் சுகக்குறைவுகளும் இடைக்கிடை ஏற்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் உதவிகள் கிடைக்கும். பிதிர்வழி, சகோதர வழித்துன்பங்கள்கூடச் சிலருக்கு ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் வெளிப்பார்வைக்கு விறுவிறுப்பாக நடப்பினும் எதிர்பார்த்த லாபம் கிடைப்பது கடினம். நிதிஇருப்புக்களிலும் குறைவு ஏற்படும். முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப்பழுவும் கூடும். வேலைசம்பந்தமான வீண் செலவுகளும் ஏற்படும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி கிடைக்கும்.

விவசாயிகளுக்கு கடந்தகாலங்களிலும் பார்க்க ஓரளவு விளைச்சல் தேறும் எனினும் உற்பத்திச் செலவுகள் கூடுதலால் லாபம் கிடைப்பது கடினம். விவசாயப்பண்ணைகளிலும் லாபம் கிடையாது.

தொழிலாளர் வேலையில்லாத்திண்டாட்டத்தால் மெலிவுறுவர், கிடைக்கும் வேலைகளுக்கும் உரியசம்பளம் பெறுவது கடினம். நாள்சம்பளம் பெறுவோருக்குச் சீவனத்துக்கே கஷ்டப்படுவர்.

மாணவர் கல்விக்குழப்பநிலை நீங்கத்தொடங்கும். மாணவர் மத்தியில் உற்சாக உணர்ச்சிகள் தோன்றும். ஆசிரியர்களின் உதவிகளால் கல்வி முன்னேற்றமும் பரீட்சையில் தேர்ச்சியும்பெறுவர்

பெண்கள் இந்தமாதத்திலும் மனநிறைவு பெறுவது கடினம். கன்னிப்பெண்களுக்கு எதிர்பார்க்கும் விவாக முயற்சிகள் சிரமங்களுடன் நிறைவேறவும் கூடும்.

அதிஷ்டநாட்கள்:- ஜன.14பக,17,18,19அ.கா
பெப்.1,2பக,5,6,9,10

துரதிஷ்டநாட்கள்:- ஜன.19காலை,20,21மு,ப,24
பெப்.2இர,3,4



## கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரப்பாதி 1,2,3-ம் கால்

கும்பராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 12ல் இரஜசமூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபலம் குன்றுவதால் பெரும்பாலும் இவர்களுக்கு நன்மைதீமை கலந்த பலன்களே நிகழும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் செலவுகளும் ஏறக்குறைய சமமாக இருக்கும். எந்த முயற்சியிலும் அலைச்சல் மூலம் காரியசித்தியும் பெறுவர். இனசனபந்துக்களால் விரையங்களும் பகைவிரோதங்களும் உண்டாகக் கூடும். புத்திரர் வழியில் கவலைகள் ஏற்படும், வீட்டில் சுபமங்கள கொண்டாட்டங்கள் நிகழும் சாத்தியமும் குறைவுறும். பூமிலாபமும் பெறுவர்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பச்செலவுகள் அதிகரிக்கும். மனைவிமக்களின் சுகவீனங்கள் முதலானவற்றால் அலைச்சலும் பெறுவர். புத்திரர் உதவிகள் கிடையாது. கணவன் மனைவி பிணக்குகளும் இடைக்கிடை ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு புதன் விரையத்தில் சூரியனால் அஸ்தமனமும் வக்கிரகதியிலும் சஞ்சரிப்பதால் முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியுறும். நிதிஇருப்புக்களும் குறையும். வாடிக்கையாளர் வரவும் குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் இணைந்து சேர்ந்து செயற்படக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்படும். ஆனால் வருமானத்திலும் பார்க்கச் செலவுகள் கூடும். பதவி உயர்ச்சி முதலியன பேச்சளவில் தொடரும்.

விவசாயிகளுக்கு சனீஸ்வரன் பலம் பெறுவதால் பயிர்ச்செழிப்பும் விளைச்சலும் மனநிறைவு தரும். விவசாயப்பண்ணைகளிலும் விளைச்சல்கூடும். கூலியாட்களும் ஒத்துழைப்பார்கள்.

தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை ஏற்படும். பெரும்பாலும் இவர்கள் வேலைவசதிகளும் பெறுவர். நாட்சம்பளத் தொழிலாளரும் தினசரி வாழ்க்கைக்குப் போதிய வருமானம் பெறுவர்.

மாணவர் கல்வி ஊக்கம் பெறுவர். ஆசிரியர் மாணவர் கருத்து மாறுபாடுகளும் இடைக்கிடை தோன்றும். தொழிற்துறைக் கல்விகற்போர் சிறப்படைவர். பொதுவாக இவர்களின் சுயமுயற்சியால் பரீட்சைகளிலும் சித்தியடைவர்.

பெண்கள் பெரும்பாலும் இந்தமாதத்தில் எண்ணங்களை நிறைவுபடுத்துவதில் சிரமப்படுவர். தமது உடல்சம்பந்தமாக அதிகம் அக்கறை கொள்ளவும் வேண்டும். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகளும் இழுபறியாகத் தொடரும்.

அதிஷ்டநாட்கள்:- ஜன.14,15,16,19,20,21
பெப்.2இர,3,4,7,8,11

துரதிஷ்டநாட்கள்:- ஜன.21,22,23,26
பெப்.5,6



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 11ல் (லாபத்தில்) சுவர்ணமூர்த்தியாக சஞ்சாரம் செய்வது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் கணிசமாகக்கூடும். இராசாங்க அதிகாரிகளின் உதவிகள் கூடக்கிடைக்கும். விற்றல் வாங்கல்மூலம் லாபங்களும் பெறுவர், முன்பு தடைப்பட்டுக் கொண்டிருந்த காரியங்களில் சித்தியும் பெறுவர். ஆனால் இராசி அதிபன் வியாழபகவான் குரூரகோசாரசஞ்சாரம் செய்வதுடன் சூரியனையும் புதனையும் திருஷ்டி செய்வதால் முன்கூறிய சுபபலன்களை அதிகம் குறைவடையச் செய்யும். தசாபுத்தி பலமில்லாதவர்கள் தெய்வ பக்தியால் சாந்தியடையலாம்.

குடும்பத்தானத்தில் செவ்வாய் இருப்பதால் குடும்ப சுகவீனம் அல்லது சச்சரவுகள் இடைக்கிடை ஏற்படும். உறவினர் புத்திரர்களின் ஒத்தாசைகள் உதவிகளும் கிடைப்பது கடினம்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். நிதி இருப்புக்கள் திருப்திகரமாக இருக்கும். தானியம் முதலான உணவுப்பொருள்களின் வியாபாரிகள் கூடியலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். ஆனால் பதவிச் சிறப்பு அல்லது பதவி உயர்ச்சி என்பன பேச்சளவில் தொடரும்.

விவசாயிகளுக்கு பயிர் அழிவுகள் ஏற்பட்டாலும் நல்ல விளைச்சல் கூடுவதால் நட்டம் வராது. விவசாயப்பண்ணைகளிலும் நட்டம் வராது.

தொழிலாளர் இந்தமாதமும் வேலைவசதிகள் பெறுவார்கள். நாள் சம்பளம் பெறும் தொழிலாளருக்கும் தினசரி வாழ்க்கைக்குப் போதிய வருமானம் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெறுவர். கணித - விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்பாக முன்னேற்றம் பெறுவர். ஆனால் கல்வி அதிகாரிகள் ஆசிரியர்களுடன் சிலவேளைகளில் கருத்து வேறுபாடுகளும் சிலருக்கு ஏற்படலாம்.

பெண்கள் இந்தமாதமும் மனநிறைவு பெறுவது கடினம். 2ல் செவ்வாய் இருப்பதும் 12ல் இராகு இருப்பதும் இவர்களை (உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாது விட்டால்) கஷ்டங்களுக்குள்ளாக்கிவிட ஏதுவாகும்.

அதிஷ்டநாட்கள்:- ஜன.14பக,17,18,19,21,22
பெப்.1,2,5,6,9,10

துரதிஷ்டநாட்கள்:- ஜன.24,25,26,28,29,30
பெப்.7,8

---

முக்கிய குறிப்பு:-

"சோதிடமலரில்" வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ-ர்

---

# புதிய ஜனாதிபதியின் பதவி ஏற்பு

வே. சின்னத்துரை. நல்லூர், யாழ்ப்பாணம்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் 2-1-89ல் காலை 10-42 மணிக்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரின் ஆட்சியின் கீழ் இலங்கை நாடு எப்படி இருக்கும் என்பதனை அந்த நேரத்திற்குரிய ஜாதகத்தைக் கணித்தால் தெரியும். இதோ ஜாதகம்.

| | | | |
|---|---|---|---|
| செ | | வி (வ) | |
| ல, ரா | இராசி | | |
| பு | | | கே |
| சூ, நெ சனி, யு | வெ | சந் | |

இலங்கையின் இலக்கினமான கும்பலக்கினமே உதயமாகிறது. அதில் ராகு நிலவுகிறது. ராகு, கேது இரண்டும் எப்படியோ இலங்கையின் சரித்திரத்தில் புகுந்து கொள்கின்றன. இலங்கையின் சுதந்திர சாதகத்திலும் துலாலக்கினத்தில் கேது நிலவியது. இவ்விருகிரகங்களும் நாட்டிற்கு சுபீட்சத்துக்குப் பதிலாக குந்தகத்தையே விளைவித்தன. பதவி ஏற்புச்சாதகத்தில் இரண்டாம் வீட்டில் செவ்வாய் நிற்பது அதற்கு பணவிவகாரங்களில் நட்டமும், அதனல் குழப்பமும், வங்கிகள் பயன் தராமையும், உண்டாகும். ஆனல் தேசியவருமானம் தாக்குப்படாது. பெரிய செலவுகளையும், வீண்செலவுக்குப் பொதுப்பணம் செல்வதையும், இராணுவச் செலவுகள் கூடுவதையும் காட்டும்.

| | | | |
|---|---|---|---|
| | ரா | | |
| வெ, பு | சுதந்திர சாதகம் | | ச (வ) |
| சூ | | | செ (வ) |
| | வி, சந் | கே, ல | |

நாலாம் வீட்டில் வியாழன் நிற்பது நிலம், நிலச்சுவாந்தார்கள், கிருஷிகம், பயிர்வகைகள், சீதோஷ்ண நிலை முதலியவற்றிற்கு மிகவும் நன்மை பயக்கும்.

ஒன்பதாம் வீட்டில் சந்திரன் நிற்பது அதற்கு செவ்வாய் திருஷ்டி விழுவதும் சமயம், மார்க்கம் முதலியன, சட்டமன்றங்கள் அதனுடன் தொடர்புகள் உள்ள விடயங்கள் சிலவேளைகளில் பாதிக்கப்பட இடமுண்டு.

பத்தாம் வீட்டில் வெள்ளி நிற்பது பொது வைபவங்கள், அரசாங்க வைபவங்கள், உயர் மட்ட விவாகங்கள், ஆடம்பரமாகவும், டாம்பீகமாகவும் நடக்கும்.

பதினேராம் வீட்டில் சூரியனும் சனியும் யுறேனசும், நெப்டியூனும் நிற்பது நாட்டில் பல கோணங்களில் கஷ்டங்கள் உண்டாவதைக் காட்டும். அரசியலாளரின் மறைவுகளையும் காட்டும். பல அரசியல் கட்சிகளில் ஸ்திரமின்மை உண்டாகும். மந்திரி சபையில் பல மாற்றங்கள் நிகழும்.

பன்னிரண்டில் புதன் நிற்பது பகிரங்க ஸ்தாபனங்களில் சுறுசுறுப்பைக் காட்டும். சட்டமாற்றங்கள் உண்டாகும்.

| | | | |
|---|---|---|---|
| கே | | வெ, செ | வி |
| | 1977 | | சூ, ச |
| | | | பு |
| | | | சந், ரா |

1977ம் ஆண்டு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசைப் பொறுப்பேற்றபோது காலசர்ப்ப யோகம் நிலவியது. அதனல் அவருடைய ஆட்சியில் மிக மோசமான நிலை உண்டாகி இலங்கையின் ஒரு பகுதியின் இறைமை கூட அற்றுப்

(24-ம் பக்கம் பார்க்க)

# ஜாதகத்தில் சனி

வி. எஸ். வேலாயுதன் துறைநீலாவணை (கி. மா)

8, 6, 11 ஆம் இடங்களில் நிற்கும் சனி எத்தகைய பலாபலன்களைத்தரும் என்பதை நோக்குவாம். 3 இல் சனி பொதுவாக நற்பலன்களையே தரும். எண்வகைப்போக போக்கியங்கள் [பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பாட்டு, பூவமளி] ஆளடிமை, சங்கீதம், தேகபலம், பராக்கிரமம், தொழில்விருத்தி, பூமிவிருத்தி, பூமிலாபம், நற்காரியம், சௌரியம், வெற்றி ஆகியவற்றைத்தரக் காரணமாகிறார். இலக்கினவாரியாக 3ல் நின்ற சனி எத்தகைய பலாபலன்களைத்தரும் என்பதைச் சுருக்கமாகக் காண்போம்.

மேட இலக்கினகாரருக்கு:- இவர் 10, 11 ஆம் இடங்களுக்கு அதிபராகி 3இல் அதாவது 10க்கு 6இல், 11க்கு 5இல் நட்புப்பெற்று நிற்கும்போது அரசாங்க நன்மை, காரியசித்தி, தெய்வவழிபாடு, பிரபலகீர்த்தி, பிறவிடங்களில் கௌரவம், தொழில்வகை நன்மை ஆயினும் தொழிலைப்பற்றிய கிலேசம், தொழிலில் மறைமுக எதிர்ப்புக்கள், இளையசகோதரதோசம், மூத்தசகோதர விரோதம். சொத்துக்களைப்பற்றிய கிலேசம் என்பன நிகழலாம்.

இடப இலக்கினகாரருக்கு:- சனி 9, 10க்குடைய யோககாரகனாகி 3இல் அதாவது 9க்கு 7இல், 10க்கு 8இல் பகைவராகிறார். இவற்றால் தந்தை வழிக்கிலேசம் அல்லது தந்தையாரைப் பற்றிய கவலை, தருமகாரிய விரோதம், தெய்வ வழிபாட்டுக்குறைவு, அவப்பெயர், தாய்க்குநோய், பூர்வீக சொத்துக்களின் இழப்பு, உயர்கல்வித் தடை, மந்தபுத்தி, தொழில் விருத்திக் குறைவு, விவசாய நஷ்டம் என்பன காட்டும்.

மிதுன இலக்கினகாரருக்கு:- இவர் 8, 9க்கு உடையராகி அதாவது அரைச்சுபனும் அரைப் பாபியுமாகி 8க்கு 8இல், 9க்கு 7இல் பகைவராகிறார். இவற்றால் மீளாவியாதி, ஆயுளுக்குப் பயமுறுத்தல், காரியக்கேடு, மனோதுக்கம், அவப்பெயர், களத்திரவிரோதம் அல்லது களத்திரபிணி, தந்தைக்கு – நோய், காரியக்கேடு, அலைச்சல், இளையசகோதரருக்கு நோய், துன்பம், தருமகாரியக்கேடு என்பன நிகழ ஏதுவாகலாம்.

கடக இலக்கினகாரருக்கு:- இவர் 7, 8க்கு உடையராகி 3இல், அதாவது 7க்கு 9இல், 8க்கு 8இல் நட்புப் பெறுகிறார். இதனால் ஏழ்மை, கலகக்குணம், குறுகியமனப்பான்மை, திமிர், பிடிவாதம், தேகசுகக்குறைவு, பொதுசனப்பிரியம், தாமதவிவாகம், வழக்குக் கஷ்டம், களத்திரபிணி, ஆயுதபீடை, கவலை, வீண்பழி, அவப்பெயர், ஆயுள்விருத்தி, என்பன நிகழும்.

சிங்க இலக்கினகாரருக்கு:- சனி 6, 7க்கு உடையராகி 3இல் அதாவது 6க்கு 10இல், 7க்கு 9இல் உச்சம் பெறுவார். பொதுவாக இத்தகைய ஜாதகர் ஒருவர் நற்பலன்களையே அடைவார். பிரபலம், தருமகாரிய கைங்கரியம் அதாவது ஆலயம், பாடசாலை போன்றவற்றை நிர்மாணித்தல், செல்வப்பேறு, வாக்குச் சாதுரியம், கௌரவம், நேர்மை, சுதந்திரம், தேகாரோக்கியம், சத்துரு ஜயம், வழக்குக் கஷ்டம், களத்திரபிணி, இனசனவிரோதம் என்பன ஏதுவாகலாம்.

கன்னி இலக்கினகாரருக்கு:- இவர் 5, 6க்கு உடையராகி 3இல் 5க்கு 11இல், 6க்கு 10இல் பகைபெற்று நிற்பர். இவற்றால் அக்கினி ஆயுதவிஷபீடை, கடினசித்தம், மகிழ்ச்சிக் குறைவு, தேகசுகக்குறைவு, அதிகசெலவு என்பனவும் புத்திரர் நன்மை, புத்தித்திறமை, நீதி சாத்திர புராணேதிகாச உணர்ச்சி, ஜலத்தால் அபாயம் வந்து போதல், சத்துருவை வெல்லுதல், நாற்கால்ஜீவலாபம் ஆகியனவும் உண்டாகப் பெற்றிடும்.

துலா இலக்கினகாரருக்கு:- சனி பகவான் 4-5க்குடையராகி 3ல் அதாவது 4க்கு12ல், 5க்கு11ல் நட்புப் பெற்று நிற்பர். இவற்றால் தந்திரம், பிரபலம், சமாதானம், உண்மை, நேர்மை, பாசாங்கு களத்திரவிரோதம், மகிழ்ச்சி, கல்வி - உயர்கல்வித் தடை, வாகனநஷ்டம், வீடு நிலபுலன்களால் பயன்குறைவு, தாய்க்குநோய், இனசனவிரோதம், புத்திரருக்கு நன்மை, மதிநுட்பம், நீதிசாஸ்திர உணர்ச்சி என்பன காணும்.

விருச்சிக இலக்கினகாரருக்கு:- இவர் 3-4 க்குடைய சுபராகி 3ல் அதாவது 4க்கு 12ல் ஆட்சி

பெறுவார்: இதனால் புத்தித்திறமை, செல்வப் பேறு, சகோதரரைப்பற்றிய துயரம், பணியாள் தொல்லை, துணிவு, தைரியம், தாய்க்குநோய், இனசனவிரோதம், வீடு, நிலம் இவற்றால் நன்மை இன்மை, உயர்கல்வித்தடை என்பன நிகழ ஏதுவாகலாம்.

தனு இலக்கினகாரருக்கு:- சனி 2-3 க்குடையராகி 3இல் அதாவது 2க்கு 2இல் ஆட்சி - மூலத்திரிகோணம் பெறுகிறார். இதனால் சகோதர வகைக்கிலேசம், செல்வப்பேறு, சத்துருவெற்றி, புகழ், நற்குண நற்செயல், முயற்சிதடை, கண், பல் சம்பந்தமான வியாதிகள் என்பன நிகழும்.

மகர இலக்கினகாரருக்கு:- இவர் 1-2க்குடையராகி 3ல் அதாவது 2க்கு 2ல் மீன இராசியில் நட்புப் பெறுவார். இதனால் காரியசித்தி, தேக பலம், பராக்கிரமம், பூமியால் நன்மை; இளைய சகோதரவகைக்கஷ்டம், பிறருதவி, குறுகியதூரப் பிரயாணங்களால் நன்மை, பரிசில்கள் பெறுதல், வீரதீரச்செயல்களால் பிரபலமடைதல் என்பனவும், இடையிடையே தனநஷ்டம், காரியக்கேடு, ஏமாற்றம், குடும்ப மகிழ்ச்சிக்குறைவு கல்வித் தடை என்பனவும் கலந்து காணும்.

கும்ப இலக்கினகாரருக்கு:- இவர் 1-12க்குடையராகி 3ல் அதாவது 12க்கு 4ல் மேடத்தில் நீசமடைகிறார். இதனால் தேகபலக்குறைவு நோய், மந்தபுத்தி, காரியத்தில் சோம்பல், பணியாள் தொல்லை, பாபச்செயல்களில் ஈடுபாடு, சகோதரரால் பிரயோசனமின்மை, பொருளாதாரக் கஷ்டம், சயனசுகக்குறைவு என்பன உண்டாம்.

மீன இலக்கினகாரருக்கு:- சனி 11-12 க்குடையராகி 3ல் அதாவது 11க்கு 5ல் 12க்கு 4ல் இடபத்தில் நட்புப்பெறுவார். இதனால் செல்வப்பேறு, வருவாய் அதிகரிப்பு, சத்துருவெற்றி, புகழ், நற்பெயர், மூத்தசகோதர வகைத்துன்பம், மனக்குழப்பம், துக்கம், கல்வியில் ஆர்வமின்மை, பிரயாணத்தொல்லை, விபத்துக்கள், வீடு, வியாபாரம், வாகனம் ஆகியவற்றால் நஷ்டம், தாய்வழித் துயர், கொடுக்கல் வாங்கல் பிணக்கு என்பன நிகழ ஏதுவாகலாம்.

அடுத்து 6, 11ம் இடத்துச் சனியின் பலாபலன்களை நோக்குவோம். (வளரும்)

# மீன லக்ன ஆணும் சிங்க லக்னப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை - நல்லூர்

அவளுடைய பாதுகாப்பு அவனுக்கு அத்தியாவசிய தேவையாய் தோன்றும்போது சிங்ககாரிக்கு இவனிடம் ஒரு கவர்ச்சி தோன்றும். அவன் சடுதியாக அவளுக்கு ஒத்தாசை செய்வதும் முழுமையாகச் செயற்படுவதையும் அவள் கண்டு அதிசயப்படுவாள். தான் எங்கே நிற்கிறேன் என்பதை சிங்ககாரி அறிய விரும்புவாள். இப்படி ஒரு நிறுதிட்டமில்லாதவருடன் வாழும் வாழ்க்கை வன்மையான முடிவுக்கு உண்டாக்கலாம். இடையிடையே அவளுடைய தாராள அன்பு விரும்பப்பட்டு, திரும்பக் கொடுக்கவும்படும். சில சமயங்களில் அவன் பின்வாங்கி மனதில் அவளை வேறுபடுத்திவிடுவான். ஏனென்றால் அவள் தனது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக இப்படித் தனியனுக்கப்பட்டால் அவள் தன்னைத்தானே சமூக அலுவல்களில் பங்காளியாக்கிவிடுவாள். அவனுக்கு சமாதானமும் அமைதியும் வேண்டும்போது இவளது ஈடுபாடு உறுத்திக்கொண்டிருக்கும். ஒரு நாளைக்கு அவள் தர்க்கசாஸ்திரத்தைக் கையாள்வாள். இன்னொரு நாளைக்கு அவனது மனக்கிளர்ச்சிக்கு மனுப்பண்ணுவாள். அவனது மனம் அடிக்கடி மாறுபடுவதனால் அவள் தக்கநேரத்தில் மனுப்பண்ண வேண்டும். இல்லாவிடின் அவள் விரக்தியடைந்து, சபலப்பட்டு, புண்படுவாள். ஒரு அழுத்தமான நேரத்தில் சிங்ககாரி ஆழ்ந்து யோசனை செய்வாள். இரண்டும் கெட்டான் நிலைக்குத் தாழ்ந்து போக மாட்டாள். இப்படி நிலையில் மீனகாரன் ஒரு சிறு காரியத்துக்குக்கூட திகில்படுவான். கடைசியில் இது ஒரு நியாயமற்ற செய்கை என்றுணர்ந்து அவள் பொறுமை இழப்பாள். பின்பு தன்னைக் காப்பாற்ற த்தான் கர்வமுள்ள நடவடிக்கை எடுப்பாள். இது நடமுறையானால் அவன் முற்றுமுழுதாக அவளுடைய தடையை நீக்கிவிடுவான்.

இந்த மாறுபட்ட மனநிலைகள் படுக்கையறைக்குள்ளும் பிரதிபலிக்கும். கூடுதலான பாலுணர்ச்சியுள்ள சிங்ககாரி இங்கு அவைகளை இலகுவாக கையாளக்கூடும். இருபகுதியாருக்கும் பாலியல் எனின் தேவையானதே. படுக்கையறை நடவடிக்கைகளுக்குத் தக்க இவ்வுறவு நீடிக்கலாம் அல்லது முறியலாம். பாலியலில் குறைந்த ஒருவனென்றால அவனை அவள் விரும்புவாள். அதனால் சுமுகம் ஏற்படும். அவளுடைய எதிர்பார்ப்புக்களுக்குக் குறைவானால் அவன் அவளுக்கு அதிக சஞ்சலத்தை உண்டாக்குவான்.

ஒரு சிக்கலான உறவு.

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

## தொடர் 10

பெயர் எண்ணின் வலிமை - ஒலிச்சக்தியின் வலிமையும், பெயர் எண்ணால் மனிதனின் பாதிப்பும்.

ஒரு மனிதனை அவனது எண்களான பிறப்பு எண்-கூட்டு எண் பெயர்எண் என்பவை ஆதிக்கம் செலுத்துகின்றன. இவற்றில் பிறப்பு எண், கூட்டுஎண் ஒருவரை எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றதெனச் சென்றமுறை பார்த்தோம். இம்முறை பெயர் எண் ஒருவரை எவ்விதம் ஆதிக்கம் செலுத்துகின்றது எனப்பார்ப்போம்.

உலகில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாவற்றிலும் ஒரு பொதுத்தன்மையைக் காணமுடிகின்றது. அஃதாவது எந்த மதத்தினராயினும் சரி ஏதோ ஒரு வகை ஓதுதல் முறையை கையாளுகின்றனர். அதாவது ஒலியலைகளைப் பயன்படுத்தி இறைசக்தியைப் பெறுகின்றனர். இயற்கையின் சக்தியலைகளைப் பெற அல்லது அதிகரிக்க நாம் சத்த அலைகளை அதாவது ஒலி அலைகளைப் பயன்படுத்துகிறோம். இதிலிருந்து ஒலியலைகளின் வலிமை நமக்கு நன்கு புரிகின்றது. மனிதரைப் பெயரிட்டு அழைக்கின்றோம். வெறும் மனித உடலைப் பெயரினால் கூப்பிடாது அவ்வுடலைக் கருவியாக்கி இயங்கிக்கொண்டிருக்கும் உயிர்ப்புச் சக்தியைத்தான் பெயரிட்டு அழைக்கின்றோம். அம்மனித உயிர்ச்சக்தி அப்பெயரினால் சுட்டப்படுவது தான் என்று உணருவது மட்டுமல்லாமல், காலப்போக்கில் தான் வேறு அப்பெயர்வேறு என்றில்லாது அப்பெயரே தான் என்ற தன்மையைப் பெறுகின்றது. அதனால் அப்பெயரின் ஒலியலைகளின் தாக்கத்தினால் அம்மனித உயிர்ப்புச்சக்தி இயக்கப்படுகின்றது. ஒலியதிர்வுகளைப் பொறுத்தவரையில் நாம் ஒரு நுட்பத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்: நமது காதினால் கிரகிக்கக் கூடிய அதிர்வுகளையே நாம் சாதாரணமாக ஒலி என்கிறோம். நமது காதினால் கிரகிக்க முடியாத வேறு நிலையிலும் அவ்வதிர்வுகள் இருக்கின்றன. அந்நிலையில் அவ்வதிர்வுகள் நுண்சக்தி அதிர்வுகளாக அதாவது காற்றலைகளாக இருக்காமல் நுண்சக்தி அலைகளாக இருக்கும். அவற்றை நாம் புறக்கருவிகளால் உணர முடியாது. அதன் விளக்கமென்னவென்றால் ஒலியை நாம் வாய்விட்டுச் சொல்லாமல் மனத்துள் தெளிவாக அதே உச்சரிப்பை செபித்துக்கொண்டால் அதிலும் சக்தி இருக்கத்தான் செய்கின்றது. இவ்வொலி அலைகளின் சக்தி, தாக்கம் வலிமை என்பவற்றை அளவிட்டு அவற்றைப் பயன்படுத்துவதே மிக நுண்ணிய ஒரு கலையாகும். ஒலி அலைகளை நாம் அமைதியாக மனதிதுள் உச்சரிக்கும்போது அதிவேகமான சக்திப் பிரவாகம் ஏற்படுகின்றது. இதை அனுபவ உணர்வால் உணரமுடியும்.

எல்லா மொழிகளுக்கும் சக்தியுண்டு. சக்தி ஒலியதிர்வின் அடிப்படையிலானதே தவிர மொழியடிப்படையிலானதல்ல. என்ன ஒலியதிர்வுகள் பாவனையில் உள்ளனவோ அவற்றிற்கே சக்தி அதிகம் நாம் எந்த மொழியில் பெயரைப் பாவித்து வருகிறோமோ கையெழுத்திட்டு வருகிறோமோ அந்த மொழி எழுத்துக்களுக்குரிய பெறுமதி எண்களைக்கொண்டு பெயரெண்ணைக் கணக்க வேண்டும்.

இன்றைய அதிஷ்ட எண்ஞானக்கலையின் தந்தையான கெய்ரோ என்ற ஞானி இன்று பாவனையில் உள்ள சால்டியன் முறைப்படியான- ஆங்கில எழுத்துக்களின் சக்தியலைகளை வகுத்துக் கொடுத்துள்ளார். அவரின் முறையையே பல நூற்றாண்டு காலமாக - இன்றுவரை எல்லோரும் ஏற்றுக்கொண்டு பயன்படுத்திப் பலன்பெற்று வருகிறார்கள். அவரின் கணக்கு இதுவரை பிழைக்கவில்லை.

அதிஷ்ட எண்ஞானமாகிய இக்கலை உலகின் மாறாத நியதியையும், தன்மைகளையும் அடிப்

படையாகக் கொண்டதோடு, சக்தியுள்ளவையே பாவனையில் நீடிக்கும். மேலும் பாவனையில் நிலைத்திருப்பவை சக்தியைக் கொடுக்கும் என்ற கோட்பாட்டைக் கொண்டதாகும். இன்று நமது பாவனையை எடுத்துக் கொண்டால் இராசா என்று பெயரிருந்தால் "ராஜா" என்ற (Raja) ஆங்கில உச்சரிப்பையே பாவிக்கின்றோம். கா. ந. அண்ணாத்துரை என்று பாவிப்பதில்லை. சி. என். அண்ணாத்துரை என்றே பாவிக்கின்றோம். எங்களில் எத்தனைபேர் தமிழில் கையெழுத்து வைக்கின்றோம். ஆங்கிலமே தெரியாதவர்கள் கூட தமது பெயரை மட்டுமேனும் பழகிக் கொண்டு செக் போன்ற தாஸ்வேசுகளில் ஆங்கிலத்திலேயே கையெழுத்திடுகிறோம். பொதுவாக பெயர்ப்பலகைகளில் எல்லாம் ஆங்கிலமே முதலிடம் வகிக்கின்றது. அப்படி நாம் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டு நமது பெயரையும் ஆங்கில உச்சரிப்பில் வழக்கப்படுத்தி வருவோமானால் கெய்ரோவின் ஆங்கில எழுத்து ஒலியளவுச்சக்தி நம்மில் நிட்சயம் பிரதிபலிக்கும்.

ஆங்கில எழுத்துக்களின் அதிர்வுகளை ஏனைய உயிர்ப்புச்சக்தி அதிர்வுகளோடு ஒப்புநோக்கி ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் ஒரு எண்பெறுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன:-

| எழுத்து | எண் | எழுத்து | எண் |
|---|---|---|---|
| A, I, J, Q, Y | 1 | E, H, N, X | 5 |
| B, K, R | 2 | U, V, W | 6 |
| C, G, L, S | 3 | O, Z | 7 |
| D, M, T | 4 | F, P | 8 |

நாம் நமது பெயரின் முழுச்சக்தியைப்பெற ஆங்கில மொழியிலேயே எழுதிப்பாவித்து வருவதுடன் அப்பெயரின் ஓசையை எழுத்துக்களின் ஒலிக்குச் சமனாகச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் வழமையான இனிசல்களோடு சேர்த்து பெயரின் எண்பெறுமதியைக் கணித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக R. Rajah என்றால் R-2, Rajah = 10 மொத்தம் 12. ஒற்றை எண் 3 ஆகும். இவர் தனது பெயரெண்ணால்வியாழ சக்தி கொண்டவராக இருப்பார். நான் ஏற்கனவே விளக்கியபடி ஒருவரை அவரது பிறப்பெண் கூட்டெண் என்பவற்றோடு அவரது பெயரெண்ணும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

## பெயர் மாற்றம்

(பாலஎண் ஜாதிடம் என்ற எமது நூலில் விபரிக்கப்பட்டுள்ளது)

ஒரு கட்டிடத்திற்கு கருவைப்போல அதாவது தாயறைபோல, கதைக்கு கருவூலம் போல, அதிஷ்ட எண்ஞானத்திற்கு பெயரமைப்பு என்ற இப்பகுதி அமைகிறது. மிகமிக நுட்பமானதும், ஆழமானதுமான இப்பகுதி மிகவும் நிதானத்தோடும் கவனத்தோடும் அணுகப்படவேண்டும். அவசரப்பட்டு அரைகுறை அறிவோடு அல்லது அட்டவணை உதவியோடு செயற்பட்டு அல்லற்படவேண்டாமெனத் தொடக்கத்திலேயே எச்சரிக்க விரும்புகின்றேன். அதிஷ்ட எண்ஞானத்தினால் பலன்பெற விரும்புவோர் தமக்கு மிகப் பொருத்தமான பெயரொன்றால் தாம் அழைக்கப்படவேண்டியது, செபிக்கப்பட வேண்டியது. மிக அத்தியாவசியம் என்பதை உணரவேண்டும். இப்படிச் செய்து கொள்வதால் என்ன பயன் என்று சிலர் கேட்கலாம்.

ஒரு வானொலிப் பெட்டியையும், ரெலிவிஷன் கருவியையும் நாம் மிகச் சரியாக ரியூன் (Tune) பண்ணிவிட்டால் தான், ஒலி அல்லது ஒளியை தெளிவாகக் கேட்டும், கண்டும் ரசிக்க முடிகிறது. மீற்றர் கொஞ்சம் விலகினாலும் எவ்வளவு குழப்பமாகவும், இனிமைக்குப் பதில் எரிச்சலூட்டுவதாகவும் இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. நாம் எவ்வளவு சரிசெய்து கொண்டாலும் நாம் நினைத்த நினைத்தபடி நிகழ்ச்சிகளை நடைபெறச் செய்யமுடியாது. ஆனால் அது நமது நோக்கமும் அல்ல. தேவையுமில்லை என்பதை உணர வேண்டும்.

ஒரு மாமரத்தில் எவ்வளவு இனிமையான மாங்கனிகளைப் பெற முடியுமோ அதைத்தான் செய்யலாமே தவிர, அதிலிருந்து ஒரு பலாப் பழத்தைப் பெற முடியாது. அதைப் போலவே எமது பெயரை சரியான முறையில் சரியான அதிர்வில் அமையும்படி செய்து கொள்வதால் துன்பத்தினின்றும் விலகி நமக்கு வேண்டிய இனிமையை மகிழ்ச்சியை முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு வியாபாரி தன் தொழிலில் இலாபமும் சிறப்பும் அடையலாம். ஒரு அரசியல்வாதி பிரபல்யமும் பதவியும் அடையலாம். விவசாயி பயிர்களைச் செழிப்படையச் செய்து பயனடையலாம். குடும்பஸ்தவன் இல்லறச் சிறப்படையலாம். திருமணமாகாமல் இருக்கும் பெண்கள் அதிஷ்டப் பெயரினால் திருமணப் பலனையடைந்து சிறப்படைவர். போர்வீரன் வெற்றியீட்டுவான். காதலர்கள் தமது காதல் வாழ்க்கையில் வெற்றியடைவர். ஆனால் டாக்டர் மன்னனாகவோ, போர்வீரன் கோடீஸ்வரனாகவோ குடும்பஸ்தன் கலைஞனாகவோ வர முடியாது. அது தேவையும் இல்லை.

# ஆய்வு மன்றம்

வி, சுவர்ணலதா, மாவிட்டபுரம்,

உங்கள் ஜாதகப்படி 4-ம் அதிபதி வியாழன் லக்கினத்தில் ஆட்சிப்பெறுவதால் உயர்கல்வி வாய்ப்புக்கள் உண்டு.

வ, குமரேசமாணிக்கம், இடைக்காடு.

1989 ஆம் ஆண்டில் உங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கலாகும்.

ஸ்ரீதரன் ஜெயசாந்தினி, மன்னர்.

ஜாதகப்படி 3-ம், 8-ம் ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும் 4-ம் வீட்டில் இருப்பதால் நடுத்தரமான பலன்களைக் கொடுப்பார். மாரகம் செய்யார்.

செல்வி நிர்மலா இராஜேந்திரம், யாழ்ப்பாணம்.

உங்கள் கிரகநிலைப்படி 35 வயதின்மேல் திருமணம் நடக்க இடமுண்டு. கால சர்ப்ப யோகம் இருப்பதால் திருமணத்தில் தாமதம் ஏற்படும்.

சிவ. இராசராசேஸ்வரி, மயிலிட்டி தெற்கு.

தற்போது உங்களுக்கு சுக்கிரன் மகாதசை சனிபுத்தி நடக்கிறது. இது 1990 ஜனவரி மாதம் முடிவடையும். அதன்மேல் நடைபெறும் புதன் புத்தி காலத்தில் சொந்தமற்ற இடத்தில் விவாகம் கைகூடும். மணமகள் முயற்சியுடையவராயும் நற்குணமுடையவராயும் இருப்பர்.

வே. குலேந்திரன், மாவிட்டபுரம்.

உங்களுக்கு 1991-5-8 முதல் குருதசை புதன் புத்தி நடைபெறும். இக்காலம் திருமணம் நடைபெறும். சொந்தத்தில் மணமகள் கிடைக்கலாம்.

க. லக்ஸ்மன் - மட்டக்களப்பு.

தங்கள் ஜாதகப்படி தகப்பனுக்கு பிரிவினை ஏற்பட இடமுண்டு. பிள்ளைக்கு பிற்சகோதரம் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு,

ஜெ. பெஸ்லிகா பெர்ணண்டோ, கொழும்பு.

தங்கள் ஜாதகப்படி 8ல் செவ்வாய் இருப்பினும் அச்செவ்வாய் உச்சம் பெற்றிருப்பதாலும் வியாழனுடன் சேர்ந்திருப்பதாலும் தோஷம் இல்லை, 20 வயதளவில் திருமணம் கைகூடலாம்.

க. கார்த்திகேசன், தும்பளை, பருத்தித்துறை

ஜாதகத்தில் 7ம் அதிபதி புதன் நீசம் பெற்றாலும் உச்சமடைந்த வெள்ளியுடன் சேர்வதனல் நீசம் பங்கமடைந்து நற்பலன் செய்யும். வியாழனும், புதனும் பரிவர்த்தனம் பெற்றிருப்பது நற்பலனுக்குரியதே. வாழ்க்கைத்துணைவர் நற்குணமுடையவராகவும் நற்குலத்தவராகவும் சொந்தக்காரராகவும் இருப்பார்.

வி. ராஜேந்திரா, தும்பளை

உங்களுக்கு 1989இன் மேல் பிறநாட்டில் தொழில் வாய்ப்பு ஏற்படும் சாத்தியமுண்டு.

சி. ஜெயக்கொடி, கனகராயன்குளம்

உங்களுக்கு வியாபாரம் சம்பந்தமான தொழில் அனுகூலமானதாகும்.

திருமதி. கமலா கார்த்திகேயன், பருத்தித்துறை

ஒரு ஜாதகத்தின் நவாம்ச நிலையில் சனி நீசப்பட்டால் தனது தசையில் மாரகம் செய்யுமென்று சொல்ல முடியாது. நவாம்ச நிலையை வைத்து இதைத் தீர்மானிக்கக் கூடாது. ஆயுள் கணிதம் செய்துதான் மார்க்கத்தைக் குறிப்பிட வேண்டும்.

ப. விஜயகுமாரி, திருமலைவீதி, கண்டி

உங்களுக்கு 1989-10-27 வரை சுக்கிரன் தசை சுக்கிரன்புத்தி நடைபெறுகிறது. இப்புத்தியின் பிற்பகுதியில் வெளிநாட்டுப்பயணம் கைகூடும்.

ருஜி குணரத்தினம், அரியாலை, யாழ்ப்பாணம்.

ஜாதகப்படி குடும்பஸ்தானத்தில் சனி இருப்பதும் 8ல் செவ்வாய் இருப்பதும் திருமணம் கைகூடுவதில் தாமதத்தையே காட்டும். எனினும் 29 வயதில் விவாகம் கைகூடும். சனி, செவ்வாய் வழிபாடு நன்று.

வி. சிவநேசன், 1ம்கட்டைவீதி, சாவகச்சேரி

தற்போது வெள்ளி மகாதசை புதன்புத்தி நடந்து கொண்டிருக்கின்றது. இது 1990-7-24 வரை இருக்கும், இக்காலத்தில் கல்வி சம்பந்தமாக வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு. ஆயினும் தொழில் உள்ளூரிலேயே கிட்டலாகும்.

தம்பையா யோகராசா, சரசாலை தெற்கு

உங்கள் ஜாதகப்படி 2ம், 7ம், 11ம் வீடுகளை நோக்குவதால் திருமண விடயத்தில் பலதடைகள், முட்டுக்கட்டைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். தற்போது ஏழரைச்சனியின் பிற்கூறு நடைபெறுகின்றது. 32 வயதளவில் சொந்தமற்ற இடத்தில் விவாகம் நடக்கும்.

சு. ரவீந்திரன், மூளாய் தெற்கு, சுழிபுரம்

குடும்பஸ்தானத்தையும், குடும்பஸ்தான அதிபனையும் சனி திருஷ்டிப்பதால் நிம்மதியான குடும்பம் அமைவது கஷ்டம். குடும்பப்பிரச்சனை அனே

(24-ம் பக்கம் பார்க்க)

# சிவ விரதங்கள்

(முன் தொடர்ச்சி)

'கோப்பாய் – சிவம்'

## சோமவாரவிரதம்

சோமவாரமென்பது திங்கட்கிழமை. கார்த்திகைமாத முதற் திங்கட்கிழமையில் ஆரம்பித்துத் திங்கட்கிழமை தோறும் அநுஷ்டிக்கப்பெறுவது சோமவாரவிரதம். (கார்த்திகை மாதத்திங்கட் கிழமை மட்டுமே சோமவாரம் என்று தவருக நினைப்பவர்கள் பலர்.)

இதில் உபவாசம் உத்தமம். இயலாதவர்கள் இரவு ஒருபொழுது போசனம் செய்யலாம். அதுவுமியலாதவர் பகல் பன்னிரண்டு மணிக்குமேல் போசனம் செய்க. பகல்முழுவதும் பட்டினியிருந்து மாலை சிவாலயதரிசனம் செய்து வீட்டிலும் விளக்கேற்றி வணங்கியபின் போசனம் செய்தல் பெரும்பாலானோர் கைக்கொள்ளும் முறை. உபவாசமாக இருப்பவர்கள் விரதத்திற்கு முதல்நாள் ஒரு பொழுது உணவுடன் விரதமிருந்து உபவாசத்துக்கு மறுநாள்காலை எட்டரைமணிக்குள் பாரணை செய்ய வேண்டும். பாரணையிலன்று மறுபடி உணவு கொள்வதும் தகாது. இரவில் பால்பழம், பலகாரம் என்பன உண்ணலாம். இது உபவாச விரதங்கள் யாவற்றுக்கும் பொதுவிதி.

இவ்விரதத்தை பன்னிரண்டு வருடமாயினும் மூன்று வருடமாயினும், ஒரு வருடமாயினும் அநுஷ்டித்தபின் உத்யாபனம் பண்ணலாம். வாரந்தோறும் அநுஷ்டிக்க முடியாதவர்கள் கார்த்திகைச் சோமவாரம் மாத்திரம் கைக்கொள்ளலாம்.

ஆபத்துக்களிலிருந்து நம்மைக் காப்பதுடன், நம்முன்னோரை நரகத்திலிருந்து காப்பாற்றும் சக்தியும் இவ்விரதத்திற்குண்டு. சந்திரனின் பெயரால் சொல்லப்படும் வாரவிரதம் இது. சந்திரன் தோன்றியது கார்த்திகை வளர்பிறை அட்டமி சேர்ந்த ஒரு திங்கட்கிழமையில்தான். அவன் இவனை ஆராதித்து, சிரசில் அமர்ந்தது ஆகியன கார்த்திகைச் சோமவார நாட்களில்தான். கிருத யுகம் ஆரம்பமாகியதும் ஒரு கார்த்திகைத் திங்களில்தான்.

சிவாலயங்களில் விசேஷ அபிஷேகங்கள் செய்விப்பதும் தீபமேற்றுதல், மாவிளக்கிடுதல், (மாவிளக்கிடுதல் பற்றிய விபரம் இப்பகுதியில் பக்தேஸ் வரவிரதம். கார்த்திகைவிரதம் முதலிய பகுதிகளில் காண்க) திலதானம் செய்தல் (எள்ளுத் தானம் செய்தல்) முதலிய நற்காரியங்கள் செய்வது புண்ணியமாகும்,

வீட்டிலே பூஜை செய்ய விரும்புவோர் பதினொரு கும்பம் வைத்து ஏகாதசருத்திரர்களை ஆவாகனம் செய்து பூசிக்க வேண்டும். தம்பதி பூஜை செய்வதும் சிறந்தது.

## திருவாதிரைவிரதம்

மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத்திலே சபாநாயகரான சிதம்பரேஸ்வரப் பெருமானைக் குறித்து அநுஷ்டிக்கப்படுவது இவ்விரதம். இவ்விரதத்துக்கு விதியாக உபவாசமே சொல்லப்பட்டிருப்பினும் இயலாதவர்கள் சிறிது தளர்த்திக் கொள்ளலாம். பதஞ்சலி, வியாக்ரபாத, முஞ்சிகேச முனிவர்கள் இவ்விரதம் நோற்றுப்பேறு பெற்றனர்.

ஒரு வருடத்தில்வரும் ஆறு நடேசரபிஷேகங்களில் இதுவும் ஒன்று. அதிகாலையில் - உதயத்துக்குமுன் ஆர்த்திராபிஷேகம், காலையில் ஆர்த்திராதர்சனம். ஆர்த்திரா என்பது திருவாதிரை நட்சத்திரம். திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும் அபிஷேகமும், தரிசனமும் என்ற பொருளில் இவ்விரு நிகழ்ச்சிகளும் சிறப்பானவை.

தாருகாவனத்து முனிவர்கள் கர்மமார்க்கமே சிறந்ததென்ற கருத்துடன், சிவனையும் புறந்தள்ளி ஞானமார்க்கத்தையும் நிந்தித்துப் பெரியதொரு வேள்வியை நிகழ்த்தினர். சிவபிரான் பிக்ஷாடனர் வடிவெடுத்து இவர்கள் வீடுகளில் பிக்ஷையேற்றுச் செல்ல இவர்பின்னே ரிஷிபத்தினிகளும் தம்மை மறந்து வீதிவழி செல்லலுற்றனர். இது கண்டு கோபமுற்ற முனிவர்கள் மதம் கொண்ட கொடிய யானை, முயலகன் என்ற பூதம், டமரு

கம், மான், தீப்பிழம்பு, பாம்பு என்பவற்றை வேள்வியிலிருந்து தோற்றுவித்து அனுப்பினர். சிவபிரான் அவற்றையடக்கி யானையைக் கொன்று அதன் தோலை உரித்து மேலே போர்த்து பாம்பை ஆபரணமாக அணிந்து டமருகம், மான், தீப் பிழம்பு என்பவற்றைக் கரங்களில் ஏந்தி முயல கனை வீழ்த்தி அவன்மீது வலது காலை ஊன்றி நின்று இடதுகாலை தூக்கி நர்த்தனமாடி முனிவர் களுக்கு உண்மையுணர்த்தினர். இந்தநாளே ஆர்த் திராதரிசனமாகும்.

இவ்விரத நாளில் விசேஷ நிவேதனமாக களி கிண்டி வைப்பார்கள். திருவாதிரைக்களி என்று இதனைக் கூறுவர். களி என்றால் மகிழ்ச்சி என்று பொருள். சிவபிரானுக்குப் பெரு மகிழ்ச்சிதரும் உணவாக இது அமைகிறது. தேங்காய்ப்பாலை நன்கு கொதிக்கவிட்டு உப்பும் சேர்த்து அரிசிமா உழுத்தம்மா இரண்டையும் கலந்து அதனுள் போட்டுக் கிண்டி இதனைச் செய்வார்கள்.

சேந்தனார் என்ற சிவபக்தர் (பட்டினத்தாரின் பணியாளாக இருந்தவர்) சிவனடியாருக்கு அமு தளித்து வருவதைச் சிவத்தொண்டாகக் கருதிச் செய்து வந்தார், ஒரு சமயம் சிலநாட்கள் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் உணவு தயார்பண்ண எவ்வித வசதியும் அற்றவராய் இருந்தபொழுது சிவபெருமான் இவரைச் சோதிக் கும் நோக்கில் கிழவேடம் தரித்து வந்து உணவு கேட்டார். சேந்தனார் தம்வசமிருந்த மாவில் களி கிண்டிக் கொடுக்க அதை உண்டு மகிழ்ந்து தம்மை வெளிப்படுத்திய சிவபிரான் அடியவருக்கு நற்பேறு கொடுத்தருளினர். இத்தினமும் திருவா திரைப் பெருநாளேயாம்.

மார்கழித்திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாட்கள் திருவெம்பாவை நோன்பு எனப்படும். இதுபற்றி விரிவாக வேறி டத்தில் காண்க.

---

ஆய்வு மன்றம் (22-ம் பக்கத் தொடர்)

கமாக இருந்து கொண்டிருக்கும். தற்போது சந் திரன்தசை 1992 ஆண்டுவரை நடக்கிறது. இக் காலம் கடந்த பின்னரே குடும்ப ஒற்றுமை சாத் தியமாகும்.

க. ஸ்ரீதரன், நல்லூர், யாழ்ப்பாணம்

ஜாதகப்படி உங்கள் வெளிநாட்டுப் பிரயா ணம் 1989 மே மாதத்துக்குள் கைகூட இட முண்டு. தொழில் வாய்ப்புகள் கிட்டும்.

மா. ஜீவகுமார், சுராவத்தை, சுன்னாகம்

1990 ஆண்டில் பொதுமக்களுடன் ஈடுபாடு டைய, கௌரவமான தொழில் கிடைக்க இட முண்டு.

ஆ. முகிதின்பிச்சை,
வீரபத்திரர்வீதி, சாவகச்சேரி

தங்களின் விண்ணப்பம் கிடைத்தது. ஆனால் என்ன விடயத்தைப் பற்றிக் கேட்கின்றீர்கள் என்பதைக் குறிப்பிடவில்லையே.

ஜெ. தமயந்தி, கட்டுவன்றோட், மல்லாகம்.

ஜாதகப்படி ஏழரைச்சனிப் பிற்பகுதி நடை பெறுகிறது. இது 1990 மார்ச்சில் நீங்கும். அது வரை கஷ்டபலன்கள் இருந்து கொண்டிருக்கும். சனிக்கிழமைகளில் விரதமனுஷ்டித்து, வழிபாடு செய்துவரவும்.

தே. தயாரூபி, நாவலடிலேன், வண்ணார்பண்ணை

குழந்தையின் ஜாதகப்படி கல்வித்தானத்தில் செவ்வாய், குரு இருப்பதால் வைத்தியத்துறைக் கல்வி முன்னேற்றமடையும். ஆங்கில வைத்தியத் துறையில் ஈடுபாடு அதிகமாகக் காட்டுகின்றது.

கணேசராஜன், அம்மன்வீதி, கந்தர்மடம்

உங்களுக்கு வெளிநாட்டில் வேலைபார்க்கும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. சனிதசை ராகுபுத்தி முடிந்தபின் பிரயாணம் கைகூடும்.

ந. கமலஸ்ரீ, ரெம்பிள்றோட், யாழ்ப்பாணம்

ஜாதகப்படி 2-ம் வீட்டில் சனி இருப்பது கல்வி முன்னேற்றத்தில் தடை, தாமதம் என்பன காட்டுகின்றது. வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு.

---

புதிய ஜனாதிபதி........ (17-ம் பக்கத் தொடர்)

போயிற்று. ஆனால் இம்முறை காலசர்ப்பயோகம் நிலவவில்லை. ஆகையால் சுபீட்சமான அரசு ஏற் பட இடமுண்டு. ஜனாதிபதியின் லக்கினம் கும்ப லக்னத்திற்கு கேந்திரமானதால் இவர் இந்நாட் டின் தலைவராக நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்வார்.

| | | | |
|---|---|---|---|
| | | ல, பு | சூ, வெ |
| சந், செ கே | ஆர். பிரேமதாசாவின் சாதகம் | | |
| | | | ரா |
| | வி | சனி | |

Registered as News Paper at the G. P. O. Sri Lanka.




"காலம் பெறுமதியானது"

துரித சலவைக்கும் பளிச்சிடும் வெண்மைக்கும் நீலம் கலந்த ''மில்க்வைற் சலவைப் பவுடரை'' வாங்கி உபயோகியுங்கள்.

50 கிராம் சிறிய பைக்கற் ரூபா. **2-50** சதம் மட்டுமே!

பாவித்த 5 வெற்றுப்பைகளை அனுப்பி ''கந்தர் சஷ்டி கவசம்'' என்ற நூலையும் அழகிய முருகன் ஸ்ரிக்கரையும் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி யோகாசன விளக்கப்படத்துடன் கூடிய புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும் 'மில்க்வைற்'

# மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

**அன்புடையீர்! அன்பு வணக்கம்.**

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமல் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா. எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படினும் மலரை வாடவிடாமல் பாதுகாக்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையன்றோ; இதுவரை புதிய மலருக்கான சந்தாவைச் செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்திப் பதிவு செய்வித்துக் கொள்வதோடு புதியசந்தாகாரர்களையும் சேர்த்து ஊக்கமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 54-00 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 90-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 192-00 |
| | இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 237-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 4-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam. Madduvil, Chavakachcheri. Sri Lanka. Phone: 280